ஸ்ரீராமாநுஜன் 76

வருடச் சந்தா ரூ. 5.

P. B. அண்ணங்கராசாரியர் க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சி.

1955 ஏப்ரல்௴ மன்மத௵ சித்திரை௴

ஸ்ரீராமாநுஜன் 76

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசந ஸபையின் மூலமாக
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.
ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சி. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 7	1955 ஏப்ரல் மன்மதஸூ சித்திரைமீ	மலர் 4

இராமானுச நூற்றந்தாதி

நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும் * நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவியபாற்கடலும் *
உன்றனக் கெத்தனையின்பந்தரு முன்னிணைமலர்த்தாள்
என்றனக்குமது * இராமானுசா இவையீந்தருளே. (76)

(இதன் கருத்து.) * செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனுமென்கிற கீழ்ப்பாட்டிலே, எம்பெருமானார் விஷயத்தில் தமக்கு எல்லைகடந்த பக்திப்பெருங்காதலிருக்கும்படியை அமுதனார் வெளியிட்டார்; அதனால் எம்பெருமானார் திருவுள்ளம் மிகவுகந்தது; அவ்வுகப்பினால் இவர்க்கு நாம் எதைச் செய்வோமென்று எம்பெருமானார் அலைபாய்ந்தார்; அதைக் குறிப்பாகவறிந்த அமுதனார் "ஸ்வாமிந்! அடியேனுக்கு தேவரீர் வேறொன்றும் செய்தருள வேண்டா; அடியேனுக்கு ஸர்வஸ்வமாகிய தேவரீருடைய திருவடித்தாமரைகளைத் தந்தருள வேண்டுமத்தனை" என்று விண்ணப்பஞ் செய்கிறாரிப்பாட்டில்.

"நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும் நிறை" என்பது வேங்கடப் பொற்குன்றத்திற்கு விசேஷணம். பாவங்களைப்போக்கவல்லதென்றுநிலைநின்ற புகழ்பெற்றதும் * தெழிகுரலருவிகளையுடையதுமான திருமலையென்ன, பரமபதமென்ன, திருப்பாற்கடலென்ன ஆகிய இந்த ஸ்தலங்களெல்லாம் ஸ்வாமிந்! தேவரீருக்கு எப்படிப்பட்ட ஆனந்தத்தைவிளைக்குமோ, அப்படிப்பட்ட ஆனந்தத்தை அடியேனுக்குதேவரீருடைய திருவடிகள் விளைக்கும்; ஆகையாலே இத்திருவடிகளையே அடியேனுக்குச் சேமவைப்பாகத் தந்தருளவேணுமென்று பிரார்த்தித்தாராயிற்று.

* தெழிகுரலருவித் திருவேங்கடத்தெழில்கொள்சோதி யெந்தைதந்தைதந்தைக்கு— ஒழிவில்காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமைசெய்ய வேண்டும் நாம் * என்று நம்மாழ்வார் பாரித்தாப்போலத் திருமலையப்பனுக்குக் கைங்கரியம் பண்ணவேணுமென்றுவிரும்புகின்றிலேனடியேன்; ஸ்வாமிந்! அது நம்மாழ்வாருகந்த விஷயமென்று தேவரீர் உகந்திருக்கலாம். *மாகவைகுந்தங் காண்பதற்கென் மனம் ஏகமெண்ணுமிராப்பகலின்றியே* என்று

ஆழ்வார் விரும்பின திருநாட்டிலும் அடியேனுக்கு விருப்பமில்லை; அதையும் ஆழ்வாருகந்த திருநாடென்று தேவரீர் உகந்திருக்கலாம். *பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப் புணர்வதோராசை கொண்ட ஆண்டாளுக்குப்போலே திருப்பாற்கடல்நாதனோடு ஸம்ச்லேஷிக்க வேணுமென்கிற விருப்பமும் அடியேனுக்கில்லை; அதனையும் நம்தங்கை உகந்த விஷயமென்று தேவரீர் உகந்திருக்கலாம்; உண்மையில் அடியேனுகந்தவிஷயம் எதுவென்றால் 'எம்பெருமானார் திருவடிகளே சரணம்' என்பதொன்றேயாம். ஆனபின்பு இத்திருவடிகளுக்கு மேற்பட வேறொன்றும் தந்தருளவேண்டிற்றில்லையென்கை. ... ... (*)

அறுபத்திநான்கு நல்வார்த்தைகள்

(முன்தொடர்ச்சி)

40. பிடித்த பிடி விடாமையில் மூர்க்கனும் முதலையும் ஒரு வகுப்பு என்கிறார்கள்; மூர்க்கனுக்கு உலக மெல்லாங்கூடி உபதேசஞ்செய்தாலும், சிறிதும் பயன்படுவதில்லை. இராவணனுக்கு எத்தனை பேர்கள் இதமுரைத்தனர்? எவ்வெவ்விதமாக உபதேசங்கள் தந்தனர்? அதன் பலன் என்னாயிற்று என்பதை உலகமெல்லாமறிந்திருக்கிறது. இராமபிரான் கரதூஷணாதி வதம் செய்து முடித்தவுடனே அகம்பனன் ஜனஸ்தானத்தினின்றும் இலங்கைக்குச் சென்று இராவணனுக்குச் செய்தி கூற, அவன் துயரமும் கோபமுமுற்றுத் தன் தேரின் மேலேறித் தண்டகாரணியத்தில் வசிக்கும் தாடகா புத்திரனான மாரீசனிருப்பிடம் வந்தான். மாரீசனால் முறைப்படி மரியாதை செய்யப்பெற்றவவன் அகம்பனனிடத்தில் தான் கேள்விப்பட்ட செய்திகளைக் கூறி; இராமனுக்குத் தீங்கு விளைவிக்கத் தான் வந்திருப்பதாகச் சொல்லி, அதற்கு நீ துணைபுரிய வேண்டுமென்றான். உடனே மாரீசன் அவனுக்கு இதமுரைக்கத் தொடங்கினன். "அப்பா ராவணா! உனக்கு இந்த துர்ப்புத்தியை யுண்டாக்கினவன் யாவன்? உனக்கு நண்பன் போலவிருந்து உண்மையிற் பகைவனாகி உன்னைக் குடும்பத்தோடுங் கெடுக்க நினைத்து உனக்கு இந்த துர்ப்புத்தியை விளைத்தவன் யாவன்? என்று பலவும் கூறினன்.

41. மாரீசனால் இதமுரைக்கப்பெற்ற இராவணன் இலங்கைக்கு மீண்டு சென்றபின் அங்குவந்துசேர்ந்த சூர்ப்பணகையின் சொற்களால் மனந் திரியப்பெற்று, மறுபடியும் மாரீசனிடமே ஓடிவந்து பழையபடியே தன்னெண்ணத்தைக் கூறி இதற்கு நீ துணைபுரிந்தே யாவதுக வேணும் என்று மிகவும் நிர்ப்பந்தித்தான். அப்போது மீண்டும் மாரீசன் மிக விரிவாக ஹிதோபதேசஞ் செய்தனன். "அரக்கர் தலைவனே! நீ சாரர்களையனுப்பிச் சத்துருக்களின் பலாபலங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; இராமன் சௌர்ய வீர்யபராக்ரம நிதியென்பதையும், தேவாதிதேவ னென்பதையும் நீ தெரிந்துகொள்ளவில்லை, ஐயோ! உனக்கேன் இப்படி விபரீதபுத்தியுண்டாயிற்று? நீ நினைக்கிறபடி இராமனிடத்தில் ஹேய குணம் சிறிதுமில்லையே; அவன் ஸமஸ்தகல்யாண குணக்கடல் காண். அரக்கர் குலத்தை வேரோடு பிடுங்கியழிக்கும் வல்லமை வாய்ந்த இராமனிடம் அபசாரபுத்தி கொள்ளாதே; இராமனது பராக்ரமமும், தேஜஸ்ஸும் அளவிட முடியாதவை. எரிகிற நெருப்பை அணுக நினைப்பதுமுண்டோ? உனக்கு உயிரின்மேல் பற்றிருக்குமாகில், இன்பமாக இன்னமும் வாழ வேணு மென்றிருப்பாயாகில் இராமனுக்குக் கெடுதிசெய்ய நெஞ்சிலும் நினையாதே. எதிர்த் தலையிலுள்ள சக்தி விசேஷங்களை உள்ளபடி தெரிந்துகொள்ள உனக்கு சக்தியில்லையே.

அவ்விராமனிடம் நான் பட்ட பாடுகளை நெஞ்சால் நினைக்கும்போதும் உடல் நடுங்குகின்றதப்பா! இராமனுக்கு எள்ளளவும் தீங்கு செய்ய நினைத்தல் தவறு. என்பேச்சை மீறி நடக்தாயாகில் உனக்குக் கேடு விளைந்தே தீரும். ராவணா! எங்குப்பார்த்தாலும் எனக்கு ராம மயமாகவே காண்கிறது. பல்லாயிரம் ராமமூர்த்திகளைக் காண்பதுபோலுள்ளதப்பா. அவ்விராமனது அம்புகளினின்று நான் எப்படியோ தப்பிப் பிழைத்து இனி ஒருகாலும் அப்பெருமானிடத்து அபசாரப்படலாகாதென்று உறுதிகொண்டு தவக்கோலம் பூண்டு காலங்கழித்து வருகிறேனப்பா, நான் எப்பொழுதும் இராமனை நினைத்தே திகில்பட்டுக் கொண்டிருப்பதால் "ர" என்னு மெழுத்தை முதலிற்கொண்ட ரத்னம், ரதம் முதலான பேர்களுங்கூட எனக்குப் பயத்தை விளைவிக்கின்றனகாண். அவ்விராமனது பிரபாவம் என்னொருவனுக்கே தெரியும். நீ உயிரோடிருக்க விரும்புவாயாயின் இராமனது பிரஸ்தாவத்தையுங்கூட என்னிடம் செய்ய வேண்டா. எங்கும் ப்ரியமான வார்த்தைகளைச் சொல்லுவார் பலர் கிடைப்பர்கள்; அப்ரியமாயும் ஹிதமாயுமுள்ள பேச்சைச் சொல்லுவாருமிலர். கேட்பாருமிலர். நான் சொல்லும் ஹிதம் உன் நெஞ்சிற் படவில்லையே. ராவணா! நீ ராமனிடம் விரோதப்படுவாயாயின் நிச்சயமாக உன் பந்துமித்ரர்களுடன் மாண்டு போவாய். ஐயோ! ராக்ஷஸ வீரர்கள் ராமபாணங்களால் அடியுண்டு தரையில் வீழ்வதை நீ காணப்போகின்றனை: லங்காபுரம் முழுதும் ராம பாணங்களால் சூழப்பட்டு அக்னிச் சுவாலைகள் நாற்புறமும் நிரம்பப்பெற்று வீடுகளெல்லாம் நீறாகப் போவதை நீ காணப் போகின்றனை. [இத்யாதிகள் மாரீசோபதேசங்கள்.]

42. மாரீசனுடைய உபதேசத்திற் கடுத்தபடி பிராட்டியின் உபதேசம் இராவணனுக்குக் கிடைத்திருக்கிறது. இதுவும் பல தடவைகளில் கிடைத்தது. சிலவுபதேசங்கள் கேண்மின்; ராவணா! ராமன் ஆகாசத்திலுள்ள சந்திரனைக் கீழே விழத்தள்ளவும், கடல் முழுவதையும் உலரச் செய்யவும் வல்லவன். உனக்கு ஆயுள் முடிந்துவிட்டதனாலேயே அவரிடத்தில் பகையுண்டாயிற்றனக்கு; உனது லங்காபுரி விரைவில் விதவையாகப்போகின்ற படியால்தான் இராமனைப் பலவாறு இகழ்ந்து பேசுகின்றாய்; மஹா தேஜஸ்வியும் தைவ சக்தி வாய்ந்தவனுமான இராமன் கர தூஷணாதிகளான பதினாலாயிரம் ராக்ஷஸர்களை அவலீலையாகப் பொடிபடுத்தினவன் காண்; அந்த ரகு குல ராமன் உன்னையும், உன்னைச் சேர்ந்தவர்களையும் ஒரு நொடிப் பொழுதில் வதைக்க வல்லவன் காண். [இது ஆரணியகாண்ட வுபதேசம்; இனி ஸுந்தரகாண்ட வுபதேசம்.] இராவணா! இவ்விலங்கா புரியில் எல்லாச் சரக்குகளையும் கொண்டு சேர்த்து வைத்திருக்கின்றனையே, உனக்கு நல்ல வுபதேசங்கள் செய்ய வல்ல ஸத்புருஷர்களைக் கொண்டு சேர்த்து வைத்துக் கொள்ளவில்லையா? ஸத்துக்கள் இருந்தும் அவர்களை நீ அநுவர்த்திக்கவில்லை போலும். உனக்குள்ள விபரீதபுத்தி இதை நன்றாகக் கோட் சொல்லித் தருகின்றதே. ராவணா! நீ இவ்விலங்கையில் சுகமாக வாழ விரும்புவாயாயின், பயங்கரமான சாவை விரும்பாதிருப்பாயாயின் இராமனை நண்பனாகச் செய்துகொள்; அவர் தம்மிடம் உறவுகொண்டாடி வருபவர்களை ஒருபோதும் கெடுக்கமாட்டார். நானும் உனக்காக அவரை வேண்டி உன் பிழையைப் பொறுத்தருளும்படி செய்வேன். ராக்ஷஸாதமா! ஜனஸ்தானத்திலுள்ள அரக்கரனைவரும் இராமனால் மாண்டொழிந்ததை யறிந்து நீ அவரோடு எதிர் நின்று போர்புரிய வல்லமையற்றுப் பல வஞ்சகங்கள் செய்தனை; சார்ங்க மென்னும் வில்லாண்ட அவருடைய வில் நாணொலியை விரைவில் கேட்பாய்! இராமனாகிற கருடன் ராக்ஷஸஸர்ப்பங்களை அவலீலை

யாகக் கவர்ந்து கொல்ல வல்லவன். புலிகளினெதிரே புல்லிய நாய் நிற்கமாட்டாதவாறு போல, அவ்விராம லக்ஷ்மணர்களின் முன்னிலையில் நீ நிற்கவும் மாட்டாதவன். இராம பாணங்களுக்கு இலக்காகித் தொலைய வேண்டுவதுதான் உனது தலைவிதி போலும். [இத்யாதிகள் பிராட்டியின் உபதேசங்கள்.]

43. பிராட்டியின்உபதேசத்திற்குப் பிறகுதிருவடியின் உபதேசம் இராவணனுக்குக் கிடைத்திருக்கிறது. ராக்ஷஸேச்வரா! உனது நண்பனான சுக்ரீவன் உனக்குச் சொல்லியனுப்பிய இத வசனங்கள் பலவுண்டு. நானுமுரைக்கிறேன் கேளாய்! வாயுதேவனின் புதல்வனாய் அனுமனென்பவனான நான் சீதைக்காக நூறு யோசனை விஸ்தாரமுடைய கடலைக் கடந்து இவ்விடம் வந்திருக்கிறேன். தவ வொழுக்கங்களிற் சிறந்து நீதி சாஸ்திரங்களையு முணர்ந்து கீர்த்தி பெற்று விளங்குகின்ற நீ நன்று செய்தாயில்லை. உன்னைப்போன்ற புத்திசாலிகள் செய்ய முயற்சிகொள்ள மாட்டாத காரியத்தைச் செய்தாயே. ஸ்ரீ ராம லக்ஷ்மணர்கள் சீறிச் சிவந்து நிற்பார்களேல் அவர்கள் தொடுக்கும் அம்புகளின் முன்பு நிற்க வல்லவன் தேவர்களிலும் அசுரர்களிலும் மற்றுள்ளார்களிலும் எவனு மில்லையென்று உணருவாயாக. ராவணா! இராமனுக்குக் கெடுதி செய்து சுகம்பெற விரும்புவாரு முளரோ? இராமனிடம் நீ கொண்ட பகையை விட்டிட்டாயாகில் உனக்கு நல்லகாலமுண்டு. இல்லையேல் குலத்தோடும் விநாசமடைவாய். இராமனைச் சாமானிய மனிதனென்று நினையாதேகொள்; உன்னைப் படாதபாடும் படுத்தின வாலியை ஒரே பாணத்தினால் முடித்திட்டவனென்று கேட்டிலையோ? நான் ராம பக்ஷபாதத்தினால் சொல்லுபவனல்லேன்; நடு நிலைமை வாய்ந்து உனது ஹிதத்தைக் கோரிச் சொல்லுகிறே னிவ்வளவும். ராவணா! தேவேந்திரனாயினும், முப்புரங்களையெரித்த முக்கண்ணனாயினும் அவனது தந்தையான பிரமதேவனே யாயினும், இவர்களனைவரும் ஒன்றுகூடியாயினும் இராமனுக்குச் சிறிதளவும் தீங்கிழைக்க முடியாதுகாண்; இராமன் எவனை நிக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றுகிறானோ அவனை அநுக்ரஹிக்க ஒருவனாலுமாகாது. இத்யாதிகள் இராவணனுக்கு அனுமனால் கிடைத்த உபதேச நன்மொழிகள்.

44. இதற்குப்பிறகு விபீஷணாழ்வானால் இராவணனுக்குக்கிடைத்த வுபதேசங்கள் அளவு கடந்தவை. அவை ஒருதடவையல்ல, பலதடவை கிடைத்திருக்கின்றன. "இராமன் மஹா பராக்ரமசாலி; தருமமூர்த்தி; அவனோடு வீண் விரோதம் நமக்குத் தகாது; அவனிடம் அபசார க்ஷாமணம் செய்துகொண்டால் நாம் நாசமடையாமல் நெடுங்காலம் வாழலாம். எவ்வளவு ஆலோசித்தாலும் நமக்குத்தோல்வி யொழிய வெற்றி யுண்டாக இடமேயில்லை. நம்முடைய ராக்ஷச வீரர்களான மந்திரிகள் உன்னுடைய முகமலர்ச்சிக்காக ஏதோ அளம்பத்தங்களைப் பேசி உன்னை மயக்குகின்றனர். உனக்கு நேரவிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்களை நன்கறிந்து நான் உனக்குரைக்கும் இதமொழிகள் அந்தோ! உன் செவியிற் புகவில்லையே. இம்மூவுலகிலும் எங்குச் சென்றாலும் விடாது தொடர்ந்து கொல்லக்கூடிய ராம பாணங்கள் இலங்கையிற் புகாவண்ணம் தடை செய்யக்கூடிய நல்லுபாயத்தை எவ்வளவு உரைத்தும் மாட்டேனென்கிறாயே. ராவணா! நீண்ட உடலும் கொடிய விஷமுமுள்ள ராம த்வேஷமென்கிற ஓர் பெரிய ஸர்ப்பம் உன்னைச் சுற்றிக்கொண்டு கிடக்கிறது. ராவணா! நான் உனது மேன்மையை விரும்பி நன்றாக ஆலோசித்து உனக்கு நன்மை பயக்கக்கூடிய இத வசனங்களைக் கூறியும் எள்ளளவும் உனக்குப் பயன்படவில்லை. ராம பாணங்களால் உனக்கு நேரப்போகிற அனர்த்தங்களை நன்கறிந்து சகிக்க முடியாமல் இவ்வளவு முரைத்தேன். இத்யாதிகள்

45. பிறகு சுகஸாரணர்களின் உபதேசமும் இராவணனுக்குக் கிடைத்திருக்கின்றது. இவர்கள் ராவணனாலேயே அனுப்பப்பட்டு ராம சேனைகளை வந்துபார்த்து வியப்படைந்து அவனிடம் மீண்டு சென்று கூறுகின்றனர்; ராவணா! ராமனது உருவத்தையும் ஸேனைகளையும் பார்க்கில் அவனொருவனே இலங்கை முழுவதையும் நாசஞ்செய்ய வல்லவனென்று திண்ணமாகத் தோன்றுகிறது. தேவர்களாலும் அசுரர்களாலும், அல்லது ஒன்று சேர்ந்த தேவாசுரர்களாலும் ராம லக்ஷ்மணர்களை எதிர்க்க முடியாது. அவர்களை வென்றுவிடலாமென நீ நினைப்பது வீணான நகையே. அவர்களோடு நீ விரோதம் வைத்துக்கொண்டது போதும்; வீண் கோபத்தை யடக்கிக்கொண்டு க்ஷமை வேண்டுவதொன்றே தக்கது. இத்யாதிகள்.

46. சுகஸாரணர்களின் உபதேசத்திற்குப் பிறகு ராவணனுக்குத் தன் தாயான கைகஸியும் அவித்தனென்னும் பெருங் கிழவனான மந்திரியும் உபதேசம் செய்ததாகத் தெரியவருகிறது. ஆனால் இவ்வுபதேசமானது மற்ற வுபதேசங்களைப் போலே வான்மீகி முனிவரால் நேர்கொடு நேரே வெளியிடப் படவில்லை; விபீஷணன் மனைவியான ஸரமை அவ்வுபதேசங்களைத் தான் தன் காதால் கேட்டதாக ஸீதையினிடம் வந்து கூறுவதாய் (யுத்த காண்டம், ஸர்க்கம் 34ல்) தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தாயும் மந்திரிக் கிழவனுமான அவ்விருவரும் 'ராவணா! நீ ராமனுக்குத் தகுந்த மரியாதைகளுடன் ஸீதையைக் கொண்டுபோய்ச் சமர்ப்பித்துவிடு; அப்படி நீ செய்யாவிடில் உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்கட்கும் பெரிய அனர்த்தம் விளையும்' இத்யாதிகள் சொன்னதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

47. அதற்குப்பிறகு மால்யவானுடைய உபதேசம் வலிமிக்கது. இவன் ராவணனுக்குப் பாட்டனோடு கூடப்பிறந்தவனென்றும் மதியிற் சிறந்தவனென்றும் கூறப்பட்டுளன். இவன் உரைத்ததாவது "அரக்கர்கோமானே! ஓரரசன் தன் விரோதியின்வலிமையைக் காட்டிலும் குறைந்த வலிமையுள்ளவனாயிருந்தாலும் ஸம பலனாயிருந்தாலும் அந்த விரோதியோடு தான் நட்புக்கொள்ளவேண்டும்; எதிரியினும் விஞ்சிய வலிமையுடையவனாய் இருந்தால்தான் விரோதம் பாராட்டலாம். இவ்விஷயம் நீதிசாஸ்திர ஸித்தமாதலால் துர்ப்பலனான நீ பலவானான ராமனுடன் பகைபாராட்டுவது பொருந்தாது. தேவரிஷிகள் கந்தருவர் முதலான யாவரும் இராமனுக்கே வெற்றியைக்கோருகின்றனர். ராவணா! நீ தேவ தானவர்கள் யக்ஷ கந்தருவர்கள் முதலிய உயர்ந்தோரால் மரணம் நேராதிருக்கும்படி வரம் பெற்றனையே யன்றி மானிடர்களையும் வானரர்களையும் மதித்தாயல்லை. இப்போது மஹா பராக்கிரமசாலிகளான மானிடர்களும் வானரர்களும் கரடிகளும் கொண்டமூசுக்களும் இங்கு வந்து கர்ஜிக்கும்படியாய் விட்டது. இவர்களால் உனக்கு மரணம் தடுக்க முடியாததே. இந்த ராமன் கேவலம் மானிடனல்லன். விஷ்ணுதேவனே அரக்கர்களைக் கொல்ல மானிடவுருவம் தாங்கி வந்திருக்கின்றனனென்று உணர்வாயாக. ஆகவே நீ எதிரம்பு கோப்பதை விட்டு வணக்கங் கொண்டே வாழக் கடவை," என்று.

48. இவ்வுபதேசங்களுக்கெல்லாம் இராவணனுடைய மறுமொழி என்னவென்பதை நாம் விவரிக்க வேணுமோ? கடைசியாக மால்யவானுக்குச்சொன்ன மறுமொழியை மாத்திரம் இங்குத் தெரிவிப்போம். [யுத்தகாண்டம் முப்பத்தாறாவது ஸர்க்கங்காண்க] 'ராவணனுக்கு விநாசகாலம் ஸமீபித்து விட்டதனால் மால்யவான் சொன்ன ஹிதமான வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் மிகுந்த கோபத்துடன் மறுமொழி கூறுகிறான்' என்று

வான்மீகி முனிவர் அவதாரிகையிடுகின்றார். அவன் கூறின மறுமொழியாவது—"கிழவனே! ராமன் ஓர் மானிடனாகையால் அற்ப பலமுடையவன். குரங்குகளைத் துணைகொண்டவனாதலால் நிஜ பலமில்லாதவன். தந்தையால் துரத்தப்பட்டு வந்தவனாதலால் ராஜ்யமில்லாதவன். நானோ ராக்ஷஸ ராஜன், தேவர்களையும் நடுங்கச்செய்பவன். எல்லாவித பராக்கிரமங்களிலும் குறை யற்றிருக்கின்றேன். இப்படிப்பட்ட என்னை நீ குறைவாகப் பேசினது உனது மூர்க்கத்தனம். இராமன் ஏதோ கடலில் அணைகட்டிவிட்டானென்றால் இதில் என்ன வியப்பு? அவன் இங்குவந்து உயிரோடு திரும்பப்போகிறதில்லை; நான் ஒருவரையும் வணங்கப்பிறந்தவனல்லேன்" என்று இந்த வார்த்தைகளையே மீண்டும் மீண்டும் மொழிந்தொழிந்தான் இராவணன். மஹாவீர மஹாசூரர்களானோர் திரள்திரளாக மாய்ந்துமுடிந்து போவதைக் கண்டுங்கூட அவன் விதியின் பயனையே பெற்றொழிந்தான். பிறருடைய உபதேசங்களும் பயன்படவில்லை; தான் கட்கூடாகக் கண்ட பெருமைகளும் பயன்படவில்லை. மதியைக்காட்டிலும் விதியே வலிதென்று தேறிற்று.

49. ஸ்ரீராமாவதாரத்தில் பாதுகாபட்டாபிஷேக மென்று ஒன்று நடக்கப்போகிறதாக ஒருவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ராஜ்யத்தை இராமனைப் போகிறானென்று ப்ரஜைகள் எண்ணியிருந்தார்கள். பிறகு, கூனி சொற்கேட்ட கொடியவளின் வேண்டுகோளின்படி பரதனைப் போகிறானென்று எண்ணியிருந்தார்கள். இரண்டும் நடவாமல் ஒருவருமெதிர்பாராத பாதுகாபட்டாபிஷேகம் நடந்தது. க்ருஷ்ணாவதாரத்தில், மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் பலரும் திரண்ட விடத்தே பாரதப்போர் நிகழப் போகிறதென்று நிரீக்ஷித்திருந்தார்களேயல்லது கீதா சாஸ்த்ர மொன்று அவதரிக்கப் போகிறதென்று ஒருவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. அசிந்திதமாக அஃது அவதரித்தது. ஆகவே எதுவும் தெய்வச் செயலாக நடந்துவருகிறதென்பதே தத்துவம். இப்போது க்ரந்த விவாதங்கள் முற்றிவருவதும் தெய்வச் செயலே. மிகப் பெரிய சாஸ்த்ரார்த்தங்கள் வெளிவருதற்கே யென்க.

50. பிள்ளைலோகாசார்யர் * சிரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்* என்ற தனியனைப் பணித்தருளின ரென்று இந்த வார்த்தையைச் சில வகுப்பினர் வலிதாக எழுதிவருகிறார்கள். இவ்விஷயம் யதார்த்தமே யென்று யாவரும் கொள்க. இதில் விஸம்வாத லேசமுமில்லை. *தன்னாசிரியன் தன்னொடுகற்றோன், தன் மாணாக்கன் தகுமுறைகாரனென்று, இன்னோர் பாயிரமியம்புதல் கடனே * என்ற நன்னூற் சூத்திரப்படி தனியனியற்றுங்கடமை ஆசார்யனுக்கே ப்ரதமவித்தமாதலால் ஆசார்யரான பிள்ளைலோகாசாரியர் ஸ்வசிஷ்யரான சிரொன்று தூப்புல்திருவேங்கடமுடையானுக்குத் தனியனிட்டு ப்ரசம்ஸை பண்ணினது பொருத்தமே யென்று கொள்க. சிஷ்யன் ஆசார்யனுக்குத் தனியனிடுகிற முறை இப்பாட்டில் சிறிதுமில்லை யென்பது ஸ்பஷ்டம்.

51. ஸ்ரீவசநபூஷண ஆசார்யஹ்ருதயாதிகளான அனேக திவ்ய க்ரந்தங்களாலே ஸம்ப்ரதிஷ்டாபிதங்களாய் ஸஹ்ருதயஹ்ருதயஹாரிகளான திவ்யார்த்தங்களாலே விலக்ஷண ஸௌரபத்தைப் பெற்றிருக்கின்ற நம்முடைய அகவத்ய தர்சநத்தை அபரிமித அதிமதுர திவ்ய ஸூக்திகளாலே பிறர்க்கு அசைக்கவுமொண்ணாதபடி ஸுப்ரதிஷ்டிதமாக்கியருளினவர் தூய தென்மறைவல்லவர்களையே வாழ்த்தும் தூப்புல்குலமணி யொருவரேயாவர். ஆபாதசூடமகபாவியான இந்த ஸத்தர்சனத்தில் பிறர் ஒரு தூஷணமும் சொல்ல அவகாசமுறாதபடி ஸகல

விதமான குதர்க்கங்களையும் ஸமூலோந்மூலநம் செய்தருளி, ஆழ்வார்களின் அரும்பெரும் பாசுரங்களையே யடியொற்றியதான பகவத் ராமாநுஜஸித்தாந்தத்தை அல்பமதிகளால் கலக்க வொண்ணாதபடி நிலைநிறுத்தியருளின பெருவள்ளல் * சந்தமிகுதமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுருவொருவரேயென்று ஆயிரந்தடவை பேசினாலும் மிகையாகாது. ஆனால், இதைப் பேசத்தகாதவர்கள் பேசுவதுதான் தகுதியற்றது.

52. திருவரங்கம் பெரியகோயில், திருவிந்தளூர், திருச்சேறை, திருவல்லிக்கேணி, பெருமாள்கோயில், ஸ்ரீபெரும்பூதூர் முதலான பல பல திவ்ய தேசங்களில் அந்நாள் தொடங்கி இந்நாள்வரை ஸ்வாமி தேசிகனை மற்றுமுள்ள ஆசாரியர்களோடொப்ப அர்ச்சையாக எழுந்தருளப்பண்ணி ஸகலவைபவங்களும் பொலிய மஹோத்ஸவச் சிறப்புகளுடனும் ஆராதித்துவருபவர்கள் ஸ்ரீலோகாசார்ய ஸ்ரீமத் வரவரமுநி ஸம்ப்ரதாயஸ்தர்களே யல்லது மற்றையாரல்லர் என்பதையும், ஸன்னிதிக்குப் பஹிர்ப்பூமிகளான விடங்களிலே புதிது புதிதாக தேசிகன் ஸன்னிதியென்று கட்டிவைத்துக் குலாவுமவர்கள் யாரென்பதையும் விவேகிகள் விமர்சிக்கவேணும்.

53. உலகம் கவனிக்கவேண்டிய முக்கியமான நல்வார்த்தைகளை இனிமேல்காண்க. நம்முடைய வாத விவாத நூல்கள் நூற்றுக்கணக்காக அவதரித்தமையுண்டு. ஆனால் ஒன்றுகூட நாம் ஸ்வதந்திரமாக எழுதியதன்று. பிறர் தவறான விஷயங்களையும் ஆசார்ய தூஷணையான வியாஸங்களையும் எழுதி வெளியிட்டிருந்ததால் அவற்றுக்கு மறுப்பாகவே நாம் கண்டன க்ரந்தங்களை இயற்றி வெளியிட்டிருக்கிறோம். இங்ஙனேயல்லாமல் அப்ரஸக்தமாக நாமே வாதவிவாதங்களிலிறங்கி எழுதிய நூல் ஒன்றுகூட கிடையாது. உண்டானால் எடுத்துக்காட்டி நம்மை வாய்மூடுவிக்கலாம். ஆசார்ய தூஷணையாகப் பிறர் எழுதினாலும் நீ வாளாவிருக்கலாகாதோ" வென்று நம்மைக் கேட்டால் இப்பிறப்பில் வாளாவிருக்க முடியாதென்றே சொல்லுவேன்.

54. நாம் பரம ஆஸ்திகர்கள். உயர்ந்த வைதிக மதத்தைச் சேர்ந்தவர்கள். நாம் எந்த ஸம்பிரதாயத்தில் பிறந்திருக்கிறோமோ அந்த ஸம்பிரதாயத்தில் முழு நம்பிக்கையும் மஹா பக்தியுமுடையவர்களாயிருத்தல் வேண்டும். ஆனால் இதர மதங்களிலாவது இதர ஸம்பிரதாயங்களிலாவது அந்த மத ஸம்பிரதாயங்களை வளர்த்த மூலபுருஷர்களிடத்திலாவது எள்ளளவும் த்வேஷ புத்தி வஹிக்கத்தகாது. சிலபோவென்னில், இதர மதங்களையும் இதர மதப்ரவர்த்தகர்களையும் கண்டிப்பதோ தூஷிப்பதோ செய்தால்தான் தம்மதம் மேன்மைபெறுமென்றும் அதுவே தம்முடைய மதாபிமானத்திற்கு உற்றதென்றும் நினைத்து அவ்வழியில் ஊன்றுகிறார்கள். ஸமரஸம் பேம்பட்டு வாழவேண்டிய இக்காலத்தில் இதர மத குரு தூஷணைகளைச் செய்வதென்பது மிகவும் அருவருக்கத்தக்க விஷயம். ஸ்ரீராமாநுஜர் முதலிய மஹான்களும் இதர மதங்களை தூஷித்திருக்கையாலே அவர்கள் காட்டினவழியை நாம் பின்பற்றினாலென்ன? என்பர் சிலர். அந்தோ! மதஸ்தாபகாசார்யர்களான மஹான்கள் எங்கே! நாம் எங்கே! அவர்கள் எவ்வளவு கம்பீரமான நடையில் நூல்களை அமைத்திருக்கிறார்கள்! ஒரு நபரையாவது அவர்கள் சுட்டிக் குறித்ததுண்டோ? நல்லவார்த்தைகளை யுக்திகளாலும் பிரமாணங்களாலும் நிலைநாட்டவேணுமென்கிற குதூகலம் ஒவ்வொருவர்க்குமிருக்கலாம். அது தப்பன்று. சங்கராசார்ய ஸ்வாமிகளும் ராமாநுஜாசார்ய ஸ்வாமிகளும் முதலான ஆசார்யர்கள் எழுதியுள்ள நூல்களெல்லாம் ஸாத்விகத்தன்மையே வடிவெடுத்திருக்குமேயல்

லது, கோபதாபங்களும் மதமாத்ஸர்யங்களும் வெளிக்காணும்படியான சொல் ஒன்றாவது அவற்றில் காணக்கிடைக்குமோ? "வணங்குந்துறைகள் பலபலவாக்கி.........நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்" என்கிற நம்மாழ்வாருடைய பாசுரத்தின் விரிவான பொருளே உண்மையான பக்திமான்களின் நெஞ்சில் ஊன்றியிருக்கவேண்டும்.

55. அன்பர்கள் இந்தப் பாசுரத்தையே உருப்போடவேண்டும். இதற்குச்சமானமான பாசுரம் வேறென்று எந்த நூலிலாவது கிடைக்குமா? இவ்வளவு ஸமரஸமாகப்பேசின மஹான் வேறு யாரேனுமுண்டோ? ஆழ்வாரென்றால் அவரன்றோ ஆழ்வார்! தெய்வமென்றால் அவரன்றோ தெய்வம்! ஞானியென்றால் அவரன்றோ ஞானி! யோகியென்றால் அவரன்றோ யோகி! நாளைக்கும் நம்மாழ்வாரைக் கொண்டாடாத சமயத்தவர் இல்லையே. மேலே குறித்த பாசுரத்தைப் பேசும்படியான அவருடைய விசாலமான திருவுள்ளமன்றோ உண்மையில் அவர்க்கு இவ்வளவு பெருமைக்குக் காரணம்! அவருடைய வாய்மொழிகளைச் சிந்தை செய்பவர்களுக்கு (அல்லது) சிந்தை செய்யுங் குடியிலே பிறந்தவர்களுக்கு மதத்வேஷம், மத தூஷணம், மத ஸ்தாபக மஹாபுருஷநிந்தை முதலான தீய குணங்கள் தலைகாட்ட வழியுண்டோ? சங்கராசார்ய ஸ்வாமிகள் சொன்னதெல்லாம் தவறு என்றும், ராமானுஜாசார்ய ஸ்வாமிகள் சொன்னதெல்லாம் தவறு என்றும்......இப்படி ஒவ்வொரு ஆசார்யர்களையும் தூஷித்து நூல்களை யெழுதி வெளியிடுமவர்கள் எங்குமுள்ளார்கள். ஒருவருடைய மனமும் நோகாதபடி எழுதுகிற முறைமை உலகில் இல்லையா? விளக்கை ஏற்றிவைத்தால் இருள் தானே அகலாதா? அவரவர்களிடத்திலுள்ள குணங்களையும் அர்த்த விசேஷங்களையும் இதர தூஷணையில்லாமல் எவ்வளவோ பெருமைப்படுத்திச் சொல்ல முடியாதா? இதர ஆசார்யர்களை லாகவப்படுத்தி யெழுதுமவர்களுடைய நினைவு எதுவாக இருக்க வேணுமென்றால், அன்பர்களுக்கு அந்த ஆசார்யர்களிடத்திலே அருவருப்பு உண்டாகட்டுமென்றும், அந்த ஆசாரியர்களால் பிரவர்த்திப்பிக்கப்பட்ட மதம் தவறென்று தோன்றி நம்மதத்திற்கு வந்துவிடட்டுமென்றும் இப்படிச் சில நினைவுகளிருக்கலாம். இது நிறைவேறக்கூடிய நினைவன்று. ஏனென்றால்; மெய்யன்பர்களான அவரவர்கள் ஸ்வாசார்யர்களிடத்திலும் ஸ்வமதத்திலும் வைத்திருக்கிற பக்தி ஸாமான்யமானதன்றே.

56. ஸ்ரீராமானுஜர் எழுதினதெல்லாம் பிசகு என்றோ, ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் எழுதினதெல்லாம் அஸம்பத்தம் என்றோ, மணவாளமாமுனிகளெழுதியவை முழுதும் அஸாரம் என்றோ எத்தனை நிரூபணம் செய்தாலும், இந்த நிரூபணங்கள் யுக்தமானவையேயென்று தோன்றிவிட்டாலும் அவரவர்கள் அவ்வோ ஆசார்யர்களிடத்தில் வைத்திருக்கிற பக்தி விசேஷம் ஸர்வசக்தனான பகவானாலும் மாற்றவொண்ணாததன்றோ. இந்த நிரூபணங்களைக் கண்டு மாறிவிடுகிற பக்தி பக்தியோ? குண நிபந்தனமான பக்தியிற் காட்டிலும் ஸ்வரூபஸித்தமான பக்தியே உயர்ந்ததென்று நம் முன்னோர்கள் ஸ்தாபித்திருக்கும் அர்த்த விசேஷம் பக்தர்களுடைய நெஞ்சில் இயற்கையாகவே ஊறியிருப்பதன்றோ. ஆகவே இதர ஆசார்யர்களை லாகவப்படுத்திப் பேசுவதும் எழுதுவதும் ஒருவிதத்திலும் ஒரு பயனையும் பெறுவிக்க முடியாததோடு தங்களுக்கே லாகவத்தை விளைவித்து நிற்குமென்றதாயிற்று.

57. உலகில் அவரவர்களுக்குள்ள சமயப் பற்றும் ஆசார்ய பக்தியும் அசைக்க முடியாதது. ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸ்ரீ மத்வாசார்ய ஸ்வாமிகள் செய்த பாஷ்யத்தில் "ப்ரஹ்ம சப்த: விஷ்ணவி" என்றெழுதியுள்ளார். இங்கு 'விஷ்ணௌ' என்று எழுத

வேணுமேயொழிய 'விஷ்ணவி' என்றெழுத உபபத்தியில்லையென்று வித்வான்களெல்லாரும் நினைக்கக்கூடியது. ஆனால் அந்த மத்வபாஷ்யத்திற்கு வியாக்யானமெழுதியவொரு மஹா பண்டிதர் இங்கு என்ன எழுதியிருக்கிறாரென்றால்: "இவ்வாசாரியர் தாம் மஹர்ஷியென்பதையும், தம்முடைய க்ரந்தம் ஆர்ஷமென்பதையும் தெரிவிப்பதற்காக விஷ்ணவியென்று அபசப்தப்ரயோகம் பண்ணுகிறார்" என்றெழுதியுள்ளார். இதைக்கண்டு இதர வித்வான்கள் 'இது என்ன? இப்படியா எழுதுவது? அபசப்தப்ரயோகம் பண்ணியா ஒருவர் ரிஷித்வத்தை ஸம்பாதித்துக்கொள்வது!' என்று ஏசுகிறார்கள். மாத்வஸம்பிரதாயத்தில் எத்தனை வித்வான்களில்லை. அவர்களில் ஒருவருக்காவது இது அஸங்கதமென்று தோன்றுமோ? தோன்றினாலும் ஆசார்ய பக்தி குன்றுமோ? இதை அவர்கள் பெரிய நிதியாகவன்றோ கொண்டாடுகிறார்கள். நம்மாழ்வார் * என்னெஞ்சினால் நோக்கிக் காணீர் * என்றதை யாரும் மறக்கலாகாது. அந்தந்த மதத்தில பற்றுடையவர்களுக்கு அந்தந்த ஆசாரியர்கள் பேசியிருப்பது அரிய பெரிய மருந்தாகத் தோன்றுமேயன்றி வேறாகத் தோன்ற நியாயமேயில்லை. ஆகவே ஒரு மதத்தவர்கள் இன்னொரு மதத்தைச்சேர்ந்த ஆசாரியர்களிடத்தில் அஜ்ஞான அந்யதாஜ்ஞான நிரூபணம் செய்வதானது வீண் பிரயாஸம்—தவறான காரியம்—அவசியமற்ற செயல் என்றே விவேகிகள் கருதுவார்கள்.

58. உண்மையில் அவதார புருஷர்களானவர்களே ஆசார்யபீடத்தில் அமர்த்திக் கொண்டாடப்பட்டிருந்தார்களென்பதில் ஸந்தேஹமுண்டோ? திருக்கச்சிநம்பிகளை யெடுத்துக்கொள்வோம். இவர் எந்த வருணத்தில் அவதரித்தாரென்பது யாவர்க்கும் தெரியும். இவருக்கு என்ன ஞானமிருந்ததென்று இப்போது நம்மால் தெரிந்துகொள்ளமுடியாமலிருக்கிறது. மஹாஜ்ஞான நிதியாயிருந்த ஸ்ரீராமாநுஜர் இவரைத் தெய்வமாகக் கொண்டிருந்தாரென்று சொல்லப்படுகிறது. அதைச் சிலர் நம்பட்டும் நம்பாமற் போகட்டும். அந்த திருக்கச்சிநம்பிகளின் விக்ரஹாராதனையில்லாத விஷ்ணுவாலயம் இருக்கிறதாவென்று பாருங்கள். இதனாலேயே அவருடைய மேன்மை ஒப்பற்றதென்று நாம் தெரிந்துகொள்ளும்படியிருக்கின்றது. 'எந்த புற்றில் எந்த பாம்பிருக்குமோ!' என்கிற பழமொழியையும் கவனிக்கவேண்டும். எந்த ஆசாரியர்களின் ஞானம் முதலிய நன்மைகள் உலகப்பிரசித்தமாய் உலகெல்லாம் கொண்டாட நிற்கின்றனவோ அப்படிப்பட்ட ஆசாரியர்களைப்பற்றி இழிவாக எழுதிவிடுவதென்பது நெஞ்சாலும் நினைக்கக்கூடாத் விஷயம். அவர்களுக்கும் நமக்கும்—மலைக்குப் கடுகுக்குமுள்ள வாசியன்றோவுள்ளது. அவர்களெங்கே நாமெங்கே!

59 அவரவர்கள் தம்தம் மதஸ்தாபக ஆசாரியர்களை எவ்வளவு மேம்படுத்திக் கூறினாலும் இதில் யாராவது தப்பு நினைக்கமுடியுமா? 'என் தாயார் மஹாபதிவிரதை' என்று எவ்வளவு சொல்லிப் புகழ்ந்தாலும் இதில் யாருக்காவது வருத்தமுண்டாகுமோ? இதற்காக அக்கம்பக்கத்து வீட்டு மாதர்களின் பெயரை வலியப்பிடித்திழுத்து அவர்களை நிந்தித்தெழுதவோ பேசவோ புறப்பட்டால் என்னாகும்! இது யார் செய்யும் காரியம்? இதர ஸ்த்ரீகளை ஸ்வைரிணிகளென்று பழிப்பதனால் தம் தாயாருக்கு ஏதேனும் அதிக பாதிவ்ரத்யம் தேறிவிடுமோ? ஒருகாலும் தேறாது.

[இனி ஆசார்யஹ்ருதய வ்யாக்கியான விமர்சம்.]

60 ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் விளங்குகின்ற ஸகல க்ரந்தங்களுக்குள்ளும் ஆசார்யஹ்ருதயமென்கிற க்ரந்தமொன்றே மிகச்சிறந்ததென்பது ப்ரஸித்தம். இதற்கு

மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் அவதரியாதிருந்தால் இந்த க்ரந்தம் தோன்றியும் நிஷ்ப்பலம் என்று மஹான்கள் கூறுவர். அப்படிப்பட்ட இந்த மஹாக்ரந்தம் முதன்முதலாகத் தெலுங்கு லிபியில் 1876-ஆம் ஸூத்தில் அச்சிடப்பட்டது. [இற்றைக்கு எண்பது வருஷங்களுக்கு முன்பு அச்சிடப்பட்டதென்கை.] அந்தப்பதிப்பில் மூலத்திலும் வியாக்கியானத்திலும் காணப்படுகிற பிழைகள் அபரிமிதம். மூலத்திலுள்ள பிழைகளையெல்லாம் விபுலமான விவரணத்துடன் நாம் பலகால் எடுத்துக் காட்டி வெளியிட்டிருக்கிறோமாதலால் இப்போது மூலத்தை விட்டு வியாக்கியானத்தைப்பற்றி மாத்திரமே சில விஷயங்கள் விஜ்ஞாபிக்கப்படுகின்றன. மேலே ப்ரஸ்தாவித்த தெலுங்குபதிப்பில், அக்ஷரங்கள் மாறுடினவை பதங்கள் மாறுடினவை வாக்யங்கள் விட்டுப்போனவை......... இப்படிப்பட்ட அவத்யங்கள் அனேகம் புகுந்தன. ஸ்தாலீபுலாக ந்யாயேந ஸ்வல்பம் காட்டுவோம்; எட்டாவது சூர்ணையின் வியாக்கியான முடிவில் “இருவல்லருள் நல்வினைகளென்றது இருள் நல்வினையும் அருள் நல்வினையும் என்றபடி” என்றுள்ளது. இது அநந்விதம். “இருநல்வினையும் அருள் நல்வினையுமென்றபடி” என்றிருக்கவேணும். பதினோராவது சூர்ணையின் வியாக்கியானத்தில் “ஒண்பொருள் பொருளல்லாதவை யென்னுதே” என்கிற மூலத்திற்குச் சேர “ஆத்மாவின் சீர்மை பாராதே” என்றும் “அசித்தின் சிறுமை பாராதே” என்றும் மணவாளமாமுனிகள் ஸாதித்திருக்க, இரண்டிடத்திலும் (சீர்மை பாராதே) என்றே பதிப்புள்ளது. ஆத்மாவுக்குச் சீர்மையுண்டு; அசித்துக்குச் சிறுமையேயொழிய சீர்மை கிடையாது. அச்சிட்டவர்கள் [பரிசோதித்தவர்கள்] மஹாபண்டிதர்களேயொழிய ஸாமாந்யர்களல்லர். அவர்களுடைய மனதிலும் அநுபபத்தி சோன்றுமலே இப்படி அஸம்பத்தமாக அச்சிட்டுவிட்டார்கள். அந்த தெலுங்கு பதிப்பையே ஆதாரமாகக்கொண்டு 1906 ஆம் வருஷத்தில் (அதாவது இற்றைக்கு 50 வருஷங்களுக்கு முன்) ஒரு பண்டிதர் அந்த ஸ்ரீ கோசத்தைத் தமிழ் லிபியில் அச்சிட்டார். மேலே காட்டின வகையில் ஏற்பட்ட பிழைகளையெல்லாம் அந்த பண்டிதரும் தமது பதிப்பில் பரிபாலனம் செய்திருக்கிறாரேயொழிய ஒன்றையும் திருத்தினவரல்லர். அதிகப்படியான பிழைகளையும் புகுத்தினர் என்றும் சொல்லலாம். இப்படிப்பட்ட ஸ்ரீ கோசங்களை வைத்துக்கொண்டு ப்ரவசனம் செய்து போருகிற காலக்ஷேபபரர்கள், ஸ்பஷ்டமாக அநுபபத்தி தோன்றக்கூடிய இடங்களிலும் அது தோன்றப்பெருமல் பதிப்பிலிருக்கிறபடியே ப்ரவசனம் செய்து போரக் காண்கிறோம். ‘இது அநந்விதமல்லவா? அநுபபந்நமல்லவா?’ என்று விவேகிகள் கேட்டுவிட்டால் சீறிச்சிவந்த கண்ணினராய் “பூர்வாசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளை அநந்விதமென்றும் அநுபபந்நமென்றும் தூஷிக்கிறாயே பாவீ!” என்று நிந்திக்கத் தலைப்படுகிறார்கள். அச்சுப்பிழையென்று கூறினால் பூர்வாசார்யர்களின்மேல் குறை கூறுவதாக அர்த்தம் செய்துகொண்டு சீறுமவர்களைப்பற்றி என் சொல்லுவது.

இந்த ஆசார்யஹ்ருதயவியாக்கியானம் தமிழ்லிபியில் 1906 ஆம் வருஷத்தில் அச்சிடப்பட்டதென்று கீழே தெரிவித்திருக்கிறோமே. ஸ்ரீமான் உ. வே. திருநீர்மலைமாடபூஷி ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமியென்பவர் அந்த தமிழ்ப்பதிப்பு வெளியிட்டவர். அஸ்மதாசார்யரான ஸ்ரீமத் பரமஹம்ஸ. அழகியமணவாள ராமாநுஜஜீயர்ஸ்வாமி 1905 ஆம் வருஷத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி யுத்ஸவம் ஸேவிக்கத் திருவல்லிக்கேணியி லெழுந்தருளியிருந்தபோது மேலேசொன்ன திருநீர்மலை ஸ்வாமியானவர் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியிடம் வந்து, தாம் ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்தைத் தமிழ் லிபியில் அச்சிட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவித்து அந்த ஸமயத்தில் அச்சாகியிருந்த சில பாரங்களைக் காண்பித்தாராம். ஜீயர்ஸ்வாமி அவற்றைக்

கடாக்ஷித்தருளி "தேவரீர் லோகோபகார புத்தியினால் அபரிமிதமான பொருளைச் செலவு செய்து நடத்துகிற இந்தப் பதிப்பில் பலவிதமான பிழைகள் காண்கிறதே; ஸம்பிரதாயத்தி லும் தமிழிலக்கண நூல்களிலும் பரிசயமுள்ள மஹான்களைத் துணைகொண்டு இது செய்தால் நன்றாயிருக்கும்; (இவைத்துக்கு. அவைத்துக்கு) என்று இப்படியெல்லாம் அஸம்பத்தமாக அச்சிட்டிருக்கிறீரே; தமிழில் (இவைத்துக்கு, அவைத்துக்கு) என்கிற சொற்கள் கிடை யாதே." என்று சில விஷயங்கள் ஹிதமாக ஸாதித்தாராம். அதுகேட்ட அந்த திருநீர்மலை ஸ்வாமிக்கு அபரிமிதமான சீற்றம உண்டாயிற்றாம்; எனக்கு ஸம்ப்ரதாயம் தெரியாதென் றும் தமிழ் தெரியாதென்றும் இந்த ஜீயர் ப்ரசாரம் செய்யப்பார்க்கிறார் என்று கடுஞ்சொற் களைப் பொழிந்துகொண்டே எழுந்து சென்றாராம். பிழைகளை ஸ்பஷ்டமாக எடுத்துக் காட்டி னாலுங்கூட இங்ஙனே சீறிச்சிவந்து நிந்திப்பவர்களே உலகில் மலிந்திருக்கிறார்கள்.

61. அந்த ஸமயத்தில் அந்த திருநீர்மலை ஸ்வாமி தாம் பதிப்பித்துக்கொண்டிருந்த ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்தில் இரண்டாம் ப்ரகரணம் முடிவுபாகம் நடந்து கொண்டி ருந்ததாம். * பந்து கழல் பாவை * இத்யாதியான கடைசி சூர்ணையின் வியாக்கியானம் முடியுமிடத்தில் "தூதையாவது சிறு சோறடுகைக்கு உபகரணமாகையாலே" என்கிற ஸ்ரீஸூக்திக்குமேல் (முந்தின தெலுங்குபதிப்பில்) ஐந்தாறு பங்க்திகள் அடியோடு விட்டுப் போயின. திருநீர்மலைஸ்வாமியின் தமிழ்ப் பதிப்பிலும் அப்படியே விட்டிருந்தனவாம். அவற்றை ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி எழுதிக்கொடுத்தருளி "இந்த பங்க்திகள் அவச்யம் இருக்கவேண் டியவை; இதையாவது சேர்த்தால் நன்றாயிருக்கும்" என்று சொல்லியனுப்ப, "நான்வைத் துக் கொண்டிருக்கிற ஓலையேட்டிலும் இந்த பங்க்திகள் இல்லை; எந்த ஆதாரத்தைக் கொண்டு இதை நான் சேர்ப்பது?" என்று ப்ரபலமாக ஆக்ஷேபிக்க, பிறகு மஹதாப்ரயாஸேந சேர்க் கும்படி செய்தருளினதாக ஜீயர்ஸ்வாமி ஸாதிக்கக் கேட்டிருக்கை. இங்கே, முந்தின தெலுங்குபதிப்பில் விட்டுப்போய் பிந்தின தமிழ்ப்பதிப்பில் சேர்க்கப்பட்ட பங்க்திகளா வன; — (தூதையாவது சிறு சோறடுகைக்கு உபகரணமாகையாலே) என்பதற்குமேல்—

"இந்த்ரிய வ்யதிரிக்தங்களான போகோபகரணங்களுக்கு உபலக்ஷணம்; போகஸ்தான மான தேஹத்தையும் போகோபகரணமான இந்த்ரியங்களையும் பந்துகழலித்யாதியாலே லீலோபகரணமாகச் சொல்லுகிறது. லீலையாவது தாதாத்விகரஸமான வ்யாபார மாகையாலே"

என்றிவ்வளவுபங்க்திகள். இந்த பங்க்திகள் இல்லாவிட்டால் அவ்விடத்து ஸ்ரீஸூக்தியை நிர்வஹிக்கவேமுடியாதென்பது ப்ராஜ்ஞர்களுக்குத் தெரியும். பழைய தெலுங்கு பதிப்பை வைத்துக்கொண்டு ப்ரவசனம் செய்தருளும் மஹான்கள் இங்கு விட்டுப்போனபங்க்திகளால் ஒருகுறையையுமுணராமல், அந்வயிக்கவில்லையேயென்கிற க்லேசமும் படாமல் அநாயாஸ மாகக் காலக்ஷேபம் நிர்வஹித்து வருகிறார்கள்.

ஹஷாலீயம் பஞ்சலக்ஷணீ, சதுர்தசலக்ஷணீ முதலான க்ரந்தங்களின் அச்சுப் பதிப்புகளில் பல விபர்யாஸங்களுண்டு; க்ரந்த மெழுதினவர் (........அவச்சிந்ந) என்று சில விடங்களிலும் (........அநவச்சிந்ந) என்று சிலவிடங்களிலும் எழுதியிருப்பதுண்டு. அச்சில் அவை மாறிவிழுந்திருக்குமிடங்கள் சிலவுண்டு. (அவச்சிந்ந) என்றிருக்க வேண்டு மிடத்தில் (அநவச்சிந்ந) என்றும், (அநவச்சிந்ந) என்றிருக்க வேண்டுமிடத்தில் (அவச்சிந்ந) என்றும் விழுந்திருக்கிறது. சாஸ்திரவ்யுத்பத்தியும் ஆழ்ந்த அறிவும் பெற்று ப்ரவசனம் செய்பவர்கள்

ருஜுவாக அந்வயிக்கவில்லையே யென்று க்லேசப்பட்டு, ஆலோசித்து, இங்கு அச்சுப்பிழையுள்ளதென்று தெளிந்து திருத்தி ப்ரவசனம் செய்து போருவர்கள். "சதுச்சாஸ்த்ரங்களில் எந்த க்ரந்தத்தையும் நாம் அவலீலையாக ப்ரவசநம் செய்யவல்லோம்" என்றிருக்கும் சில மஹாமதிகள் மேலே காட்டின அவச்சிந்ந—அநவச்சிந்ந—விபர்யாஸங்களில் சிறிதும் திலே சப்படாமலும் மயங்காமலும் அங்குலீந்ருத்தஸாரர்களாய் வெகு அட்டஹாஸத்தோடு, ப்ரவசனம் செய்தே போவர்கள்; இங்குப் பிழையுள்ளதென்று கண்டறியவேமாட்டார்கள். ப்ராஜ்ஞர்கள் எடுத்துரைத்தாலும் இது விச்வாமித்ரஸ்ருஷ்டியென்று ஏசி நிற்பர்கள். இவ்விதமாகவே ஸம்ப்ரதாயக்ரந்தங்களிலும் நேர்ந்திருக்கிற விபர்யாஸங்களை ப்ராமாணிகர்கள் எடுத்துக்காட்டினால் "மூர்க்கச்ச மகாரச்சைவ க்ருஹீதக்ராஹிணவுபௌ" என்றிருக்கும் சில அதிகாரிகள் வீணான ஆக்ஷேபங்களைச்செய்து போது போக்குவது தவிர, சுவைகண்டு மகிழ பாக்யமற்றவர்களாகிறார்கள்.

62. ஆசார்யஹ்ருதயத்தில் நான்காம் ப்ரகரணத்தில் "மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய்" என்றவிடத்து வியாக்கியானத்தில் பழைய தெலுங்கு தமிழ்ப்பதிப்புகளிரண்டிலும் விட்டுப்போன பங்க்திகள் ஏட்டுப்பிரதிகளிலிருந்து ப்ரகாசிதமாயிருப்பதற்கு க்ருதஜ்ஞதாநுஸந்தானம் பண்ண ப்ராப்தமாயிருக்க, அது செய்யாததோடு ஆக்ஷேபிக்கவும் முன்வந்திருக்கும் மஹாநுபாவர்கள் "ந தே நிராகரணீயா: ஸவிதாரோ ஹ்யா அநீயா:" என்று ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில் பட்டர் அருளிச்செய்த கணக்கிலே சோசநீயர்களத்தனை. * வளவேழுலகு திருவாய்மொழியில் ஆழ்வார் நைச்யாநுஸந்தானம் பண்ணி அகன்று முடியப் பார்த்தார் என்பது விஷயம், அதற்கு 'தத்து' என்று பெயர் வைக்கப்பட்டது. இந்த தத்தானது * வளவேழுலகு திருவாய்மொழியில் இரண்டு தடவை நேர்ந்ததென்று கணக்கிடுவதானது ஸமஞ்ஜஸமாகாது; முதலிரண்டு பாட்டிலே அது தோன்றிக் கழிந்து மறுபடியும் தலைகாட்டியிருந்தாலுங்கூட அந்தப் பதிகத்திற்கு அதுதான் ப்ரமேயமென்று கொள்ளப்பட்டிருக்கையாலே அதில் இரண்டு தத்து என்று கொள்ளுவது ஒருகாலும் ஸங்கதமாகாது. திருவாய்மொழி நூற்றந்தாதியில் * தளர்வுற்று நீங்கநினைமாறனைமால் நீடுலகு சீலத்தால், பாங்குடனே சேர்த்தான் பரிந்து * என்று ஸாராம்சத்தை யருளிச்செய்திருக்கையாலே எம்பெருமான் தனது சீலகுணத்தைக்காட்டி ஆழ்வாரைப் பொருந்தவிட்டுக்கொண்டதுதான் அந்தப்பதிகத்திற்கு ப்ரமேயம் என்று விளங்காநிற்கச் செய்தேயும், (அதாவது, எம்பெருமானுடைய சீலகுணாதிசயத்தை யநுபவிப்பதுதான் இத்திருவாய்மொழிக்கு ப்ரதான ப்ரமேயமென்று விளங்காநிற்கச் செய்தேயும்) வியாக்கியானங்களில் *வளவேழுலகுதலையெடுத்து * என்று அடிக்கடி யருளிச்செய்யப்படுவதை நோக்குமளவில், ஆழ்வார் நைச்யாநுஸந்தானம் பண்ணிப் பின்வாங்கப் பார்ப்பதுதான் இத்திருவாய்மொழிக்கு ப்ரமேயமென்கிற கொள்கை சிறப்புற்றதாகத் தெரியவருகின்றது. அது இத்திருவாய்மொழியில் ஒருவிசையன்று, இரண்டு விசை என்று சொல்லுவதானது மிகவும் அஸமஞ்ஜஸம். * வைகுந்தன் வந்து கலந்ததற்பின் வாழ்மாறன் செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து * என்கிற திருவாய்மொழிநூற்றந்தாதியின்படியும், இதற்கு மூலமான ஈட்டு ஸ்ரீஸூக்தியின்படியும் இரண்டாவது தத்து வேறென்று தேறியிருக்க, அதை விட்டொழிப்பது ஸுதராம் அநுசிதம். எல்லாவற்றுக்கும் மேலாக, சுத்தமான ஏட்டுப் பிரதிகளில் கண்ட பாடத்திற்குக் கண்ணழிவு சொல்லவொண்ணாதென்பது முக்கியமான ஹேது. பங்க்திகள் விட்டுப்போன

அச்சுப்புத்தகத்தைப் பரமப்ராமாணிகமென்று கொண்டு அஸ்தாநே ப்ரத்யவஸ்தானம் பண்ணுவது தகாது. தங்களுக்குப்பாடம் கிடைக்கவில்லையென்கிற காரணத்தினால், பிறர்க்குக்கிடைத்திருக்கின்ற பாடத்தை ஆக்ஷேபிக்கப்புகுவது மிகவும் ஸாஹஸம். ஸ்வயம் அம்ருத பானம் பண்ண பாக்கியமில்லாதவர்கள் அம்ருதத்தையே தூஷிக்கப்புகுவதுமுண்டோ?

63. ஜகத்காரணத்வஹேதுநிரூபணம்; ஈச்வரனே ஜகத்துக்குக்காரணம் என்பது வேதாந்திகளின் கொள்கை. ஜகத்தை ஈச்வரன் ஸ்ருஷ்டிக்குமளவில் ஸ்வேச்சையாலே ஸ்ருஷ்டிக்கிறானேயொழிய வேறு ஹேதுக்களாலே ஸ்ருஷ்டிக்கிறானல்லன். ஸ்ருஷ்டியைக்குறித்து வேறு ஹேதுக்கள் எவை இருக்கக்கூடும் என்று பார்க்குமளவில், நம் ஆசார்யர்கள் சில ஹேதுக்களைக் காட்டுகிறார்கள் — அவித்யை, கர்மம் பரகியோகம் என்னுமிவை. இவை எம்பெருமான் செய்யும் ஸ்ருஷ்டியைக்குறித்துக் காரணமாகச் சொல்லப்படுகின்றனவல்ல; ஸாமாந்யமாக இதரர்கள் செய்யும் ஸ்ருஷ்டியைக் குறித்து இவை காரணமாகக் கூடியவையென்றும் எம்பெருமான் செய்யும் ஸ்ருஷ்டிக்கு இவை காரணமல்லவென்றும் தத்வத்ரயம் முதலான க்ரந்தங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதரர்கள் செய்யும் ஸ்ருஷ்டியில் அவித்யையும் கர்மமும் பரகியோகமும் காரணமாகிறபடி எங்ஙனே யென்னில், உலகத்திலே ஒன்றையொன்று உண்டாக்குவதாகக் காண்கிறோம். அப்படியுண்டாக்குவதற்கு எது காரணமாகிற தென்னில், அவித்யையும் கர்மமும் காரணமாகிறது. விஷயாந்தர ஸுகப்ராவண்ய ஹேதுவான அஜ்ஞானத்தாலும் கர்மத்தாலும் ஒன்றையொன்று உண்டாக்கக் காண்கிறோம். அதிகாரி புருஷர்களான பிரமன் முதலானோர் பகவானுடைய கட்டளையினால் ஸ்ருஷ்டி செய்கையாலே அவர்களின் காரணத்வத்துக்கு பரகியோகம் காரணமாகிறது. எம்பெருமான் செய்யும் ஸ்ருஷ்டிக்கு இவை காரணமல்ல; ஸ்வேச்சையே காரண மென்றது.

இதரர்கள் செய்யும் ஸ்ருஷ்டிக்குக் காரணமாகக் கூடியவை அவித்யா கர்ம பரகியோகங்களாகிற இவைமாத்திரமேயோ? இன்னும் ஏதேனுமுண்டோ? என்று விமர்சித்த ஆசார்யர்கள் இன்னமுமொன்றுண்டு என்று கூறியிருக்கிறார்கள். அது எதுவென்னில்; தத்வத்ரய வியாக்கியானத்தில் (ஈச்வரப்ரகரணத்தில்-20). "அவர்ஜநீயமான ரோகமோ" என்றுள்ளவிடத்தில் விசாரம். ரோகம் என்று சில ஸ்ரீகோசங்களிலும், ராகம் என்று சில ஸ்ரீ கோசங்களிலும் காண்கிறது. இவற்றில் எது உபபந்நமென்று பார்ப்போம். ரோகம் என்பதே உபபந்நமென்று சிலர் சொல்லுவதால் அந்த பாடத்தின்படியே வைத்து உபபத்தியை விமர்சிப்போம். அவித்யாகர்ம நிபந்தநமான காரணத்வம் எப்படி ஸகல ஜந்துக்களிடத்திலும் ஸித்திக்கிறதோ அப்படியே ரோக நிபந்தநமான காரணத்வமும் ஸித்திக்கக் குறையில்லை. ரோகமுள்ளவன் வயிற்றிலே க்ரிமிகீடங்களுண்டாவதை எங்குங் காணுகின்றோம். ஆகவே காரணத்வத்தைக் குறித்து ரோகத்தையும் ஒரு காரணமாகச் சொல்லலாம்; எவஞ்ச ரோகமென்கிற பாடம் கொள்ளத்தக்கதே யென்னலாம்.

64. இங்கே மஹாமதிகள் கூறுவதென்னவென்றால், (அவர்ஜநீயமான) என்கிற விசேஷண ஸாமர்த்யாஹாரத்தினால் இங்கு உண்மையை நிஷ்கர்ஷிக்கலாம். கீதையில் மூன்றாமத்யாயத்தில் (34) * இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ * என்ற ச்லோகத்தில் ஸ்ரீராமாநுஜபாஷ்யத்தில் "ப்ராசீநவாஸநாஜநித [illegible] ராக: [illegible]" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. அதையடியொற்றியே (அவர்ஜநீயமான ராகம்)

என்கிற ஸ்ரீ ஸூக்தி தோன்றியது. ஸ்ரீமத் கோவர்த்தநம் ரங்காசார்யர் ஸ்வாமி ஸம்ஸ்க்ருத பாஷையில் அநுவாதம்செய்து தேவநாகரலிபியில் அச்சிட்டிருக்கிற தத்வத்ரய வியாக்கியானத்தில் "சுவஜ-உநீயொஹொ ஹ:" என்கிற பாடம் காண்கிறது. சுவஜ-உநீயொ ஹொஹ: என்பது கீழே பாடாந்தரமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. "ஜந்மாந்தரக்ருதம், கர்ம வ்யாதிரூபேண பாததே" என்கிறபடியே கர்மமும் வ்யாதியும் ஒருவாறு அநதிரிக்தமாகையாலே ரோகமென்கிற பாடத்தில் ஔசித்யமில்லை. ராக மென்கிறபாடத்திலும் அநதிரிக்தத்வவாதம் சிலர் செய்வதுண்டு. அவர்களுக்கு நாம் ஒன்று தெரிவிக்க விரும்புகிறோம். ஆசார்யஹ்ருதயத்தில் (69) *உதாத்தாதி பதக்ரமேத்யாதி சூர்ணையில் "எழுத்தசை சீர்ப்பந்தம் அடிதொடை நிரை நிரை யோசை தனையினம் யாப்புப் பாத்துறை" இத்யாதியை விவரித்தருளா நின்ற மணவாளமாமுனிகள் "பந்தமும் தளையுமொன்றாகையால் புநருக்தமாகையாலே இரண்டத்தொன்று வர்ஜிக்கவேணும்" என்றும், "துறையென்கிறவிதுவும் இனத்தின் வகையிலொன்றாகையாலே புநருக்தமாம்" என்றும் அருளிச்செய்திருக்கக்காண்கிறோம். "இரண்டத்தொன்று வர்ஜிக்கவேணு" மென்று ஸ்வாமி ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருந்தும் ஒன்றையும் வர்ஜிக்கக் காண்கிறிலோம். ஸூக்ஷ்மேக்ஷிகையினால் அநதிரிக்தமாயிருந்தாலும் ஸ்தூலத்ருஷ்டியில் அதிரிக்தமேயென்று கொள்ளத் தட்டில்லை. ரோகமென்கிறபாடத்தை யாதரிக்க விரும்புமவர்களை யாரும் தடைசெய்திலர். இதைப்பற்றி அந்யத்ர விரிவாக எழுதியுள்ளோமாதலால் இங்கு ஸம்க்ஷிப்தமானபடி. மேலே காட்டின கீதாபாஷ்ய ஸ்ரீ ஸூக்தியின்படி (அவர்ஜநீயமானராகம்) என்கிற பாடத்திற்கே ஔசித்யாதிசயமுள்ளது. (*)

ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியருடைய

அறுபத்துநான்கு நல்வார்த்தைகள்

முற்றுப்பெற்றன.

அபூர்வமான வடதேச யாத்திரையைப்பற்றி முடிவான விளம்பரம்.

11—6—1955 தேதிமுதல் **19—8—55** தேதிவரையில் ஒரு அபூர்வமான வடதேச யாத்திரை நடக்கப்போகிறதென்பதை இதற்குமுன் வெளிவந்த விளம்பரங்களினால் பெரும்பாலும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் அறிந்திருக்கக்கூடும். இதைப்பற்றி ஸாரமாக இப்போது வெளியிடுகிறோம்.

1. இந்த யாத்திரையில் வடநாட்டிலுள்ள ஸகல க்ஷேத்ர தீர்த்தங்களையும் ஒன்று விடாமல் தரிசிக்க ப்ராப்தமாகும். 2. 78 நபர்கள் கொள்ளும்படியான ரைல்வண்டி போகியொன்று நம்முடைய ஸ்வாதீனத்திலிருக்குமாதலால் ஓரிடத்திலும் ஒருவிதமான சிரமமும் படாமல் சுகமாக இந்த யாத்திரை நடைபெறும்.

3. தங்குமிடமெங்கும் உபயவேதபாராயணங்களும் ஸ்ரீராமாயணாதிபடனங்களும் கர்ணாம்ருதமாக நடந்துகொண்டிருக்குமாதலால் பரமபவித்திரமான இந்த யாத்திரையில் ரைல் செலவும் ஸாப்பாட்டுச்செலவும் செலுத்தி அந்வயிக்க விருப்பமுள்ள நபர்கள் 50 பேர்கள் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். 116 பேர்கள் சேர்ந்து யாத்திரை செய்யலாமென்று முன்னம் உத்தேசித்திருந்தோம். அதில் அஸௌகரியங்களை நோக்கி 78 பேர்களுக்குமேல் சேர்த்துக்கொள்வதில்லையென்று முடிவு செய்யப்பட்டது. இந்த 78 பேர்களில் பாராயணக்காரர்களும் பரிசாரகர்களும் ப்ரவர்த்தகர்களும் 28 நபர்களாவர்கள். மிச்சம் 50 நபர்கள் மட்டுமே சார்ஜ் செலுத்தி இதில் சேர்ந்துகொள்ளலாம்.

4. ரைல்சார்ஜுக்காக 250 ரூபாயும் சாப்பாட்டுக்காக 150 ரூபாயும் ஆக 400 ரூ. நபர் ஒருவர் செலுத்தவேண்டும். நிகழும் ஏப்ரல்மாத முடிவுக்குள் 50 ரூபா அட்வான்ஸ் தொகை செலுத்தி கமிட்டியின் கார்யதர்சிக்கு அர்ஜி எழுதிக்கொள்ளவேண்டும். மிச்சம் 350 ரூபாயை மேமாத முடிவுக்குள் செலுத்தவேண்டும்.

5. பாம்பே வழியாய்ச்சென்று கல்கட்டா வழியாய்த் திரும்புவதாக இதற்குமுன் பிரசுரம் செய்திருந்தோம். சில முக்கிய காரணங்களை நோக்கி, கல்கட்டா வழியாய்ச் சென்று பாம்பேவழியாய்த்திரும்புவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பதரிகாச்ரமம் போகிறவர்கள் கயா க்ஷேத்திரத்திற்கு முன்னடிப்போகவேணுமென்பதே முக்கிய காரணம்.

இந்த யாத்திரையின் திருத்தமான புரோக்ராம்.

1955 ஜூன்மீ
11வ மதராஸ் சென்ட்ரல் (இரவு 8-மணிக்கு புறப்பாடு)
12 கோதாவரி
13 ஸிம்மாசலம்
14 ஸ்ரீகூர்மம்
15, 16 புரிஜகன்னாதம்
17, 18, 19 கல்கட்டா
20, 21 கயா
22, 23, 24 காசி (பனாரஸ்)
25, 26 பிரயாகை (அலஹாபாத்)
27. 28 சித்ரகூடம்
29, 30 அயோத்யை

ஜூலைமீ
1வ கான்பூர்
2, 3 நைமிசாரணியம்
4 to 16 ஹரித்வாரம் ரிஷிகேசம்
[பதரிகாச்ரமம் போய்வர விருப்பமுள்ளவர்களுடைய ஸௌகர்யத்திற்காக ரிஷிகேசத்தில் 12 நாள் தங்குவது]
17 குருக்ஷேத்திரம்
18, 19, 20 டில்லி
21 to 25 மதுரா ப்ருந்தாவனம் கோகுலம் கோவர்த்தனம் வகையறு
26 ஜயபூர்
27, 28 புஷ்கரம் (அஜ்மீர்)
29 ஸித்தபூர்
30, 31 நாதத்வாரா

ஆகஸ்டுமீ
1, 2 உஜ்ஜயினீ
3, 4 டாகோர்த்வாரகை
5 அஹமதாபாத்
6 வீரங்காம்
7 to 11 கோமதீத்வாரகை, பேடீத்வாரகை, ஸுதாமாபுரீ, ப்ரபாஸம்
12 பரோடா
13, 14 பாம்பே
15, 16 நாஸிக்பஞ்சவடீ
17, 18 பண்டரிபூர். ஷோலாபூர்
19 மதராஸ்.

தபால்கள் எழுதவும் பணம் அனுப்பவும் விலாசம்:
கராலபாடி. ராதாகிருஷ்ணய்யா, 147, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்—1.

PILGRIMAGE OF NORTH INDIAN SHRINES.

It has already been brought to the notice of the public that arrangements have been made for a tour of all North India Vaishnavite shrines and places of importance, in good company and with the least trouble. Some alterations have since been made in the rules and tour programme. So we have issued this final notice for the information of those that might be interested in this tour.

Every important sacred place is included in this tour. There will be regular recitals of Vedas, Divya Prabandhas, Sri Ramayana, Sri Bhagavatha etc., throughout the journey, adding greatly to its piety. Every effort will be made to make the journey convenient and enjoyable to the pilgrims.

One railway bogie accomodating 78 persons has been reserved for the journey and as such, the total strength of the party is restricted to 78 people only. Of these, 28 people, viz., reciters of Veda and Divya Prabandha, cooks and managers etc., do not pay anything for their fare, or food. The other 50 persons are required to pay Rs. 250 for train fare and Rs. 150 for food. Intending pilgrims are requested to apply to the following address, with an advance of Rs. 50 by the end of this month (April). The balance of Rs. 350 must be paid up before 31—5—1955.

The reason for the main alteration in the tour programme is to visit Gaya before proceeding to Badri Narayan. But, the whole party as such will not go to Badri Narayan. Only those that desire to visit that shrine can do so at their own will and the others will remain at Hardwar awaiting their arrival.

The following is the modified tour programme.

1955 JUNE
11th **Madras Central Station Departure at 8 p m.**
12 Godavari
13 Simhachalam
14 Sri Kurmam
15, 16 Puri Jagannath
17. 18, 19 Calcutta
20, 21 Gaya
22, 23. 24 Banaras (Kasi)
25, 26 Allahabad (Prayag)
27, 28 Chitrakot
29, 30 Ayodhya
JULY
1 Kanpur
2, 3 Naimisaranyam
4 to 16 Hardwar Rishikesh (for Badari Narayan)
17 Kurukshetram
18, 19, 20 Delhi

JULY
21 to 25 Mathura, Brindaban, Govardhan, Gokulam etc.
26 Jaipur
27, 28 Pushkar (Ajmer)
29. Siddhapur
30. 31 Nathadwara
AUGUST
1, 2 Ujjain
3, 4 Dakore Dwaraka
5 Ahmedabad
6 Viramgam
7 to 11 Gomati Dwaraka, Beti Dwaraka, Sudhampuri, Prabhas
12 Baorda
13, 14 Bombay
15, 16 Nasik Panchavati
17, 18 Pandharpur (Sholapur)
19 Madras (Arrival)

All communications, applications and money orders etc., to be sent to—
SRI. C. RADHAKRISHNAIAH, 147, Annapillai St, G.T, Madras-1.

10-4-1955.

ஆராய்ச்சிக்கு அருமருந்தான மறுமொழிகள் 64

(முன்தொடர்ச்சி.)

18464

50. "ஸ்ரீஸூக்திகளின் ஐககண்ட்யம்" என்கிற முந்தின வியாஸத்திலே நாம் எழுதியிருந்ததாவது—"*த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே—என்றவிடத்திற்கு வியாக்கியான மருளிச் செய்யாநின்ற மணவாளமாமுனிகள் "ரக்ஷ மாம் சரணாகதாமென்று சரணம்புகுந்த த்ரௌபதிக்கு" என்றருளிச் செய்திருப்பதை உற்றுநோக்க வேணும்: அநபேக்ஷிதமாக ஓரக்ஷரமும் எழுதியருளத் திருவுள்ளம் பற்றாதவரான மாமுனிகள் 'சரணம் புகுந்த த்ரௌபதிக்கு' என்றெழுதியருளினதானது அக்காலத்திலேயே சில அல்பச்ருதர்கள் ஸ்ரீவசநபூஷண ஸூக்திக்கும் முமுக்ஷுப்படி ஸூக்திக்கும் பரஸ்பரவிரோத சங்கை செய்துகொண்டிருக்க, அது ஸுதராம் அஸ்தாநே என்று காட்டியருள்வதற்காகவே யென்று பெரியார் பகர்வர்" என்று. இதைப்பற்றி ஆராய்ச்சிவியாஸம் எழுதியிருப்பதை விமர்சிக்கிறோம்.

51. இங்கு முதலில் ஒரு விஷயம் தெரிவிக்கலாகிறது. நம்முடைய வாக்கியத்தை அநுவதிக்குமிடத்து நாம் ஸ்ரீ மணவாளமாமுனிகளென்று எழுதியிருப்பதாக ஆராய்ச்சி வியாஸம் காட்டுகிறது. ஸ்ரீ என்கிற சொல்லை சேர்க்கத்தகாதவிடங்களில் சேர்க்கும் வழக்கம் நம்மிடத்து எப்போதுமில்லை. ஸ்ரீ ஆழ்வார், ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை, ஸ்ரீ நம்பிள்ளை, ஸ்ரீ மணவாளமாமுனிகள்...........என்றிப்படி சேராச்சேர்த்தியாக எழுதுகிற வழக்கம் பிறரிடத்துள்ளதேயன்றி நம்மிடத்து இல்லை. இப்படியெழுதுவதை நாம் க்ஷேபிப்பதுமுண்டு. ஆகவே நம்முடைய வாக்யத்தை உதாஹரிக்குமிடத்து நாமெழுதாததைக்கூட்டி யுதாஹரிப்பது இனி வேண்டாவென்று விஜ்ஞாபிக்கப்படுகிறது. பூர்வாசார்ய க்ரந்தங்கள் சிலவற்றில், ஸ்ரீ திருப்பல்லாண்டு, ஸ்ரீ திருமலை ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார்.......என்று காண்பதானது அச்சிட்டவர்களின் கைச்சரக்கேயல்லது ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்தியன்று என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. (இனி விஷயத்திற் செல்வோம்.) மேலே உதாஹரிக்கப்பட்ட நம்முடைய வாக்கியத்தைப்பற்றி ஆராய்ச்சி வியாஸம் என்ன கூறுகிறதென்றால் "அஃது அவ்விஷயத்தை உபபாதித்துக் கூறவில்லை" என்று கூறுகின்றது. அங்கு நாம் அதிகமான விவரணம் அநபேக்ஷிதமென்று விடுத்தோம். அபேக்ஷிதமென்று தெரிவதால் இப்போது விவரணம் காட்டுகிறோம்.

52. "த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது திருநாமமிறே" என்கிற ஸ்ரீஸூக்திக்கு வியாக்கியானம் செய்தருளுமிடத்து—"மஹாஸதஸ்ஸிலே துச்சாஸநன் வஸ்த்ராபஹாரம் பண்ணுகிறபோது அவ்வாபத்திலே க்ருஷ்ணன் தூரஸ்தனாயிருக்கச்செய்தேயும் த்ரௌபதிக்கு வஸ்த்ரத்தை வர்த்திப்பித்துக்கொடுத்தது திருநாமமிறே" என்றிவ்வளவே அருளிச்செய்யவேண்டியிருக்க, "சரணாகதாமென்று சரணம்புகுந்த த்ரௌபதிக்கு" என்றருளிச் செய்திருப்பதானது, த்ரௌபதியானவள் சரணாகதியிலே ஊன்றினவளேயொழிய நாமஸங்கீர்த்தனமாகிற தனிப்பட்ட வுபாயத்திலே ஊன்றினவளல்லள் என்பதைக்காட்டுதற்காகவே. ப்ரபத்தியின் உள்ளீடான நாமஸங்கீர்த்தனத்தினால் பெற்றதாகச் சொல்லப்பட்ட பேறு ப்ரபத்தியினுடையதே யென்பது ஸுவ்யக்தமாகக் காட்டப்பட்டதாயிற்று. இங்ஙனன்றிக்கே, ப்ரபத்திபண்ணின த்ரௌபதிக்கு ப்ரபத்தியினால் பலன் ஸித்திக்கவில்லையென்

றும் நாமஸங்கீர்த்தனத்தினுல்தான் அது விசித்தித்ததென்றும் காட்டுவதுதான் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திக்கு லக்ஷ்யம் என்னில், அப்போது மாமுனிகள் மஹாபாரதவிருத்தமாகத் திருவுள்ளம் பற்றினரென்றுதான் சொல்லநேரும். இப்படிப்பட்ட அவத்யத்தை மாமுனிகள் ஒருகாலும் ஸஹியார்.

53. த்ரௌபதி ப்ரபத்திபண்ணினபோது எவ்விதமான பலனை அவள் உத்தேசித்தாளென்னும் விஷயத்தை முக்கியமாக நாம் ஆராயவேண்டும். வஸ்த்ரம் வளர்ந்து செல்லவேணுமென்று இதைத்தான் அவள் உத்தேசித்தாளென்று சொல்லுவது பொருந்தாது. இப்படி ஒரு காரியம் உண்டென்பது அவளுடைய புத்திக்கு எட்டியிருக்க ப்ரஸக்தியேயில்லை. கண்ணபிரான் தன்னுடைய விலக்ஷண சக்தியோகத்தாலே புடவை சுரக்கப் பண்ணினனத்தனையல்லது, இங்ஙனேயாகவேணுமென்று அவள் கோரியிருந்தாளல்லள். மானபங்கமாகாமே நோக்கியருளவேணுமென்னுமித்தனையேகருதி ப்ரபத்திபண்ணினள். "த்ரௌபதிக்குப் பலம் வஸ்த்ரம்" என்று பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்ததும் "வஸ்த்ரார்த்தமாக" என்று மணவாளமாமுனிகளருளிச்செய்ததும், நிகழ்ந்த வரலாற்றைத் தெரிவித்த மஹாபாரதத்தை யடியொற்றியேயாம்.

54. மறுபடியும் தெரிவிக்கிறோம்—த்ரௌபதி வஸ்த்ரவ்ருத்தியை விரும்பினளென்று நெஞ்சாலும் நினைக்கவேண்டா. ப்ரஹ்லாதாழ்வான் தூணிலிருந்து ஒரு நரசிங்கம் தோன்றவேணுமென்றுவது தோன்றப் போகிறதென்றுவது நினைத்தவனேயல்லன். கஜேந்திராழ்வான், * தேவீஹஸ்தாம்புஜேப்ய: * என்று தொடங்கி பட்டர் நான்கு ச்லோகங்களினலருளிச்செய்கிற கோலாஹலத்தோடே எம்பெருமான் மடுவின்கரையேற வரப்போகிறனென்றுவது, "பாதம் பராமம்ருசஷோபிச காமநீஷா" என்று ஆழ்வானருளிச்செய்தபடி (ஆனைக்காலென்று உலகர் பழிக்கநின்ற) தன் காலைத் தடவிக்கொடுக்கப் போகிறனென்றுவது நினைத்திருந்தவனல்லன். பாதுகாபட்டாபிஷேகமொன்று நடக்கப் போகிறதென்று பரதாழ்வானும் நினைத்தவனல்லன், ஒருவருமே நினைத்திருந்ததில்லை. அவரவர்கள் தங்கள் ரக்ஷணத்தை ஸாமான்யமாகக் கோலுமவர்களேயல்லது இன்னபடியின்னபடி செய்தருளி ரக்ஷிக்கவேணுமென்று எம்பெருமானுக்கு வழிகாட்டுகிறவர்களல்லர். "ரக்ஷமாம் சரணாகதாம்" என்றும் "இமாமவஸ்தாம் ஸம்ப்ராப்தாம் அநாதாம் கிமுபேக்ஷஸே" என்றும் சொன்ன த்ரௌபதிக்கு ஒருபடி தன்னை மஹத்தான ஆபத்தில் நின்றும் ரக்ஷித்தருளவேணுமென்பது தவிர வஸ்த்ரவ்ருத்தியைச் செய்வித்து ரக்ஷிக்கவேணுமென்று நெஞ்சில் ஒரு மூலையிலும் நினைக்கப்பட்டிருக்கவில்லை.

55. வஸ்துஸ்திதி இப்படியிருக்க, "த்ரௌபதிக்குப் பலம் வஸ்த்ரம்" என்கிற ஸ்ரீவசனபூஷண ஸ்ரீஸூக்திக்குச் சிலர் நிர்ப்பந்தித்துக்கூறும் பொருள் ஆகாசதாண்டவத்தில் சேருமத்தனை. அவள் 'எனக்கு வஸ்த்ர விவ்ருத்தியைப் பண்ணித்தரவேணும்' என்று அபேக்ஷித்தாள் என்று சொல்லுகிற வார்த்தையானது மஹாபாரதம் நடையாடுமிடத்திலே விலை செல்லக் கூடியதன்று.

56. ப்ரக்ருத விசாரத்தில் இஃதொன்றுதான் தலையான விஷயம். த்ரௌபதி அபேக்ஷித்தது என்ன? என்பதை விசாரித்து நிர்ணயிப்பதே. அவள் வஸ்த்ரார்த்தமாக ப்ரபத்தி பண்ணினளென்கிற பூருவர்களின் வார்த்தைக்கு "எனக்கு வஸ்த்ரத்தை வளரச் செய்ய

வேணுமென்று ப்ரபத்தி பண்ணினள்'' என்று பொருள் கொள்ளுவது ஒருபடியாலும் பொருந்தா தென்பதைப் பலதடவை கூறினும் புநருக்தியாகாது. அப்படி சரித்திரம் சொல்லப்பட்டிருக்கவில்லை. அது ஸம்பாவிதமுமன்று. வஸ்த்ரவ்ருத்தி பலனாகக் கிடைத்த கதையைக் கொண்டே வஸ்த்ரார்த்த மென்று ஆசார்யர்களருளிச் செய்தார்களத்தனை. கிம் பஹுநா! அவள் எதையபேக்ஷித்தாளோ அது ஸித்தித்து விட்ட தென்பதிலும், அது நாமோச்சாரணஸஹித ப்ரபத்தியினால்தான் ஸித்தித்த தென்பதிலும் ப்ராமாணிகர்கள் விஸம்வாதப்படமாட்டார்களாகையாலே இவ்விஷயத்தில் பிறருடைய வாக்ஜாலம் சுஷ்க வாக்ஜாலமே யென்று கொள்ளத் தட்டில்லை.

—— மிக முக்கியமான விஷயர். ——

57. த்ரௌபதி கதறின காலத்திலே கண்ணபிரான் நேரில் எழுந்தருளாமைக்குப் பிறர் கூறும் காரணமும் மஹாபாரத விருத்தம். அந்த ஸமயத்திலே ருக்மிணிப் பிராட்டியான வள் கண்ணனைப் பஞ்ச சயனத்தின்மேலேற்றிக் கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்ப னுகிப் போகமயக்குக்களாலே மயங்கப்பண்ணி விட்டாளென்றன்றோ பிறர் சொல்லுவது மெழுதுவதும் இது மஹாபாரதத்தைக் கனவிலுங் காணாதாருடைய கூற்று.

58. மஹாபாரதே வநபர்வணி பன்னிரண்டாமத்யாயத்தில்—வநவாஸம் செய்கின்ற பாண்டவர்களிடத்துக் கண்ணபிரானெழுந்தருளின வரலாறு கூறப்பட்டிருக்கிறது. (ச்லோ. 51.) * பாஞ்சாலீ புண்டரீகாக்ஷம் ஆஸீநம் யாதவைஸ் ஸஹ, அபிகம்யாப்ரவீத் க்ருஷ்ணு சரண்யம் சரணைஷிணீ * என்று தொடங்கிக் கண்ணபிரானை நோக்கி த்ரௌபதி முறையிட்ட முறையீடுகள் வெகு விரிவாக வருணிக்கப்பட்டிருக்கின்றன. அப்போது கண்ணபிரான் த்ரௌபதியை ஆச்வாஸப்படுத்திவிட்டு, (அத்யாயம் 13ல் தருமபுத்திரரை நோக்கி — "நைதத்க்ருச்ச்ரம் அநுப்ராப்தோ ப⁴வாந் ஸ்யாத்³வஸுதா⁴தி⁴ப। யத்³யஹம் த்³வாரகாயாம் ஸ்யாம் ராஜந் ஸந்நிஹித: புரா॥ ஆக³ச்சே²யமஹம் த்³யூதம் அநாஹூதோபி கௌரவை:। ......வாரயேயமஹம் த்³யூதம் ப³ஹூந் தோ³ஷாந் ப்ரத³ர்சயந்॥" இத்யாதிகள் கூறியுள்ளான். அதாவது, நீங்கள் இப்படிப்பட்ட கஷ்டத்தை யடைந்த காலத்தில் நான் த்வாரகையில் இருக்க வில்லை. அங்கு இருந்தேனுகில் இப்படிப்பட்ட கஷ்டம் உங்களுக்கு நேர்ந்தே யிராது. என்னையழையாமலிருந்தாலும் நானுகவே அங்கு வந்து சூதாட்டமே நடவாதபடி தடுத்திருப்பேன்.......என்றுன்.

59. பிறகு (அத்யாயம் 14ல்) கண்ணனை நோக்கி தருமபுத்திரர் கேட்கிறுர்—"அஸாந்நித்⁴யம் கத²ம் க்ருஷ்ண! தவாஸீத்³ வ்ருஷ்ணிநந்த³ந। க்வ சாஸீத்³ விப்ரவாஸஸ்தே கிம் சாகார்ஷீ: ப்ரவாஸத:?॥—கண்ணு! நாங்கள் கஷ்டப்பட்ட காலத்தில் நீ த்வாரகையில் இருக்கவில்லை யென்கிருயே; அப்போது எங்கே வெளியேறியிருந்தாய்? என்ன காரியத்திற்காக வெளியேறியிருந்தாய்? இதைச்சொல்லவேணுமென்றுர். அதற்குக் கண்ணபிரான் "சால்வஸ்ய நக³ரம் ஸௌப⁴ம் க³தோஹம் ப⁴ரதர்ஷப⁴। நிஹந்தும் கௌரவச்ரேஷ்ட²! தத்ர மே ச்ருணு காரணம்॥" என்று தொடங்கி ஸால்வவதத்திற்காகத் தான் தேசாந்தரம் சென்றிருந்த வரலாற்றை விரிவாக வுரைத்திருக்கிறுன்.

60. இதிஹாஸதத்துவம் இங்ஙனேயிருக்க, த்ரௌபதி கதறினபோது க்ருஷ்ண பகவான் த்வாரகையிலே யிருந்ததாகவும் எழுந்துவரவொட்டாதபடி ருக்மிணிப்பிராட்டி

லீலாரஸவிசேஷங்களாலே தடுத்துவிட்டதாகவும் பிறர் சொல்லுவது மெழுதுவதும் எவ்வளவு அழகு! என்பதை ப்ராமாணிகர்கள் பரிசீலிக்கவேணும்.

61. விச்வகுணாதர்சத்தில் கச்சியுலகளந்த பெருமாள் ஸன்னிதியை வருணிக்கின்ற விச்வாவஸு "𑌰𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌶𑍁𑌤𑍍𑌵𑌨𑌿𑌷𑍇𑌧𑌿𑌗𑍋𑌪𑍁𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌸𑍍𑌯𑌾𑌯𑌤𑌨𑌂 𑌨𑌿𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌾𑌂—ரவிக்ரமாசுத்வ நிஷேதிகோபுரம் த்ரிவிக்ரமஸ்யாயதநம் நிசாம்யதாம்." என்றான்; அதாவது ஸூர்யன் ஆகாசத்தில் விரைந்து செல்வதைத் தடைசெய்கின்ற கோபுரத்தையுடைய உலகளந்த பெருமாள் ஸன்னிதியைக் காணாய் என்கை. அடியோடு கோபுரமேயில்லாத பச்சை வண்ணர் ஸன்னிதியைப்பற்றி இங்ஙனே வருணியாமல் ஐந்தாறு முழம் உயரமுள்ள கோபுரத்தோடு கூடிய உலகளந்தான் ஸன்னிதியைப்பற்றி வருணித்ததில் பாதகமொன்று மில்லையென்று அஸ்மதுபாத்யாயர் கூறுவர். த்ரௌபதி கதறினபோது கண்ணன் த்வாரகையில் இருந்தாலாவது இவர்கள் பேசுகிற பேச்சு ஒருவாறு பொருந்துமென்னலாம். பொருந்துவதற்கு அணுமாத்ரமும் ப்ரஸக்தியில்லாதபடி எதையாவது பேசி ஸபாரஞ்ஜநம் செய்வது ஹரிகதாகாலக்ஷேபகாரர்களுக்கு ஸஹஜம். அஃது இவர்களுக்கு ஏனுக்கு?

62. ஸுப்ரஸித்தர்களான திருமழிசை அண்ணாவப்பங்காரும் ஸ்ரீமத்பரமஹம்ஸ. எம்பார் ஜீயர்ஸ்வாமியும் அத்யந்தம் நவீநர்கள். இவர்களுடைய உக்திகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எல்லார்க்குமுள்ளது. புருஷதோஷங்களான ப்ரமப்ரமாத விப்ரலிப்ஸைகளினின்று இவர்கள் பூர்த்தியாக விடுபட்டவர்களல்லர் என்பதை யாவரும் இசைந்தே தீருவர். இதை விஜ்ஞாபிப்பது நமக்கு அபசாரமேயானாலும் அவர்ஜநீயமாயிற்று.

63. விரோத பரிஹாரமென்னுமிந்த வியாஸம் ஸ்ரீவைஷ்ணவ வுலகுக்குப் புதிதன்று. ஸ்ரீமான். உவே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசார்யஸ்வாமிக்கு ஷஷ்ட்யப்த பூர்த்திமஹோத்ஸவம் நடந்தபோது "கோபாலக்ருஷ்ணமாசார்யர் மலர் மாலை" என்றொரு பெரிய புத்தகம் வெளியிடப்பட்டது. அதில் (3. 187 பக்கத்தில்) இந்த விரோத பரிஹார வியாஸம் வெளிவந்திருக்கிறது. பன்னிரண்டாண்டுகட்கு முன்னமே வெளிவந்து அப்போதே பரிசீலனை செய்யப்பட்ட வியாஸமிது. ஸ்ரீவசநபூஷண ஸூக்திக்கும் முமுக்ஷுப்படி ஸூக்திக்கும் விரோதகந்தமுமில்லாதிருக்க விரோதபரிஹாரமென்று மகுடமிட்டது ஸமஞ்ஜஸமன்று என்றே ஸகல ப்ராஜ்ஞர்களும் ஸமகண்டமாகச் சொல்லுவது. சக்ரவர்த்தி திருமகன் திருவயோத்தியில் திருவவதரித்ததாக ஒரு நூலிலும், கோஸல நாட்டில் திருவவதரித்ததாக மற்றொரு நூலிலும் எழுதப்பட்டிருந்தால் இங்கு விரோத சங்கை பண்ணி விரோத பரிஹாரமென்றொரு வியாஸமெழுத ஆவச்யகதையுண்டோ? "எல்லா ப்ரமாணங்களிலும் தேஹத்தாலே பேறென்கிறது; திருமந்த்ரத்தில் ஆத்மாவாலே பேறென்கிறது; சரமச்லோகத்தில் ஈச்வரனாலே பேறென்கிறது; த்வயத்தில் பெரிய பிராட்டியாராலே பேறென்கிறது" என்கிற முமுக்ஷுப்படி ஸ்ரீ ஸூக்தியின்மேல் ப்ரபலமான விரோத பரிஹார வியாஸம் அவதரிக்கவேணுமே; ஏன் அவதரிக்கவில்லையோ? ஸகல சாஸ்த்ரங்களும் ஏகவிஷயகங்களாயிருக்க, ஒன்றுக்கு தேஹத்தாலே பேறென்கையிலே நோக்கென்றும், மற்றொன்றுக்கு ஆத்மாவாலே பேறென்கையிலே நோக்கென்றும், வேறொன்றுக்கு ஈச்வரனாலே பேறென்கையிலே நோக்கென்றும், இன்னொன்றுக்குப் பெரிய பிராட்டியாராலே பேறென்கையிலே நோக்கென்றும் பிள்ளை லோகாசார்யர் ஸாதிக்கிறாரே, இவை பரஸ்பர விருத்தங்களல்லவா? இந்த விரோதத்தை ப்ரபலப்படுத்திப் பேசுகிறவர்கள் எங்கும் மலிந்துள்ளார்கள். இவற்றை நோக்கி விரோத பரிஹாரமவதரித்தால் மஹோபகாரமாகும்

64. "விரிவஞ்சி நிற்கிறோம்" என்று ஆராய்ச்சி வியாஸம் தலைக்கட்டுகின்றது. விரிவுக்கு அஞ்சவேண்டா. எதற்காக அஞ்சவேணும்? உலகுக்கு உண்மைப் பொருள் தெரியவேண்டிய ப்ரஸக்தி நேர்ந்தால் விரிவுக்கு அஞ்சாது விஷயங்களை விளக்கவேண்டுவது மிக அவசியமல்லவா? எதையெழுதினாலும் எவ்வளவெழுதினாலும் தாங்கிக்கொள்ள பக்நன் காத்திருக்கும்போது விரிவுக்கு அஞ்சுவது வீணே. "ஆதலால் விரோத பரிஹாரம் பொருத்தமுடையதேயாம்" என்று ஆராய்ச்சி வியாஸம் நிகமனம் செய்திருப்பது பல படியாலும் பொருத்தமற்றதென்பதை பரிசீலக ப்ரவீணர்களான ப்ராமாணிகர்கள் நன்குணர்வர்கள். ஸ்ரீ வசநபூஷண ஸூக்திக்கும் முமுக்ஷுப்படி ஸூக்திக்கும் விரோதலேசமுமில்லை, சங்காப்ரஸக்தியுமில்லை யென்பதே பரமார்த்தம் முடிவாக ஒரேவார்த்தை; பிள்ளைலோகாசார்யருடைய திருவுள்ளத்தால் த்ரௌபதியின் ப்ரபத்தி நிஷ்ப்பலமென்று தேறுமாகில் ஸ்ரீ வசநபூஷணத்தில் "த்ரௌபதி ஸ்நாதையாயன்றே ப்ரபத்தி பண்ணிற்று" என்கிற ஸ்ரீ ஸூக்தி புக ப்ரஸக்தியேயில்லையாகும். த்ரௌபதி ரஜஸ்வலையாயிருந்து ப்ரபத்தி பண்ணினபடியால்தான் அது பலிக்கவில்லையென்றும், ஆகவே ப்ரபத்திக்கு ப்ரகார நியதி அவச்யமுண்டென்றும், ப்ரகாரநியதியில்லையென்று பிள்ளைலோகாசார்யரருளிச் செய்தது பிசகென்றும் ப்ரத்யவஸ்தானமுண்டாகுமானால் வாய்திறக்க வழியேயில்லையாகும். இங்ஙனே பல ஆபத்துக்களுக்கு இடமளிக்கின்ற விரோத பரிஹார வியாஸம் பல திருத்தங்களைக்கொண்டு வெளிவருவது நன்று. ... ... *

ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர்

எழுதிய ஐககண்ட்யஸமர்த்தனம்

முற்றிற்று.

எம்பெருமானார் மஹோத்ஸவம்.

நாற்றிசையும் கொண்டாடும் நாளாகிய சித்திரையில் செய்ய திருவாதிரையில் திருவவதரித்த எம்பெருமானாருடைய மஹோத்ஸவம் ஸகல திவ்யதேசங்களிலும் வெகுசிறப்பாக நடைபெற்றாலும் திருவவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரில் நடைபெறும் பரிசு லோகவிலக்ஷணமானதென்பது உலகமுழுதுமுணர்ந்ததே. இவ்விடத்தில் இம்மஹோத்ஸவம் 18—4—55 முதல் 28—4—55 வரை பரமவைபவம் பொலிய நடைபெற்றது. திவ்யப்ரபந்தகோஷ்டியிலும் வேதபாராயண கோஷ்டியிலும் நூற்றுக்கணக்கான ஸ்வாமிகள் ஸேவை ஸாதித்தது பொலிக பொலிக பொலிக வென்று காப்பிடுதற்குரித்தாயிருந்தது.

பகவத்ராமானுஜ க்ரந்தமாலா.

ஸ்ரீராமானுஜர் அருளிச்செய்த ஒன்பது க்ரந்தங்களையும் ஒரே ஸம்புடமாக தேவநாகர லிபியில் அச்சிட்டு வருகிறோமென்பது முன்னமே பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த க்ரந்தமாலையை ஸ்ரீராமானுஜருடைய திருவவதாரதினத்தின்று (27—4—55) முடித்து வெளியிடுவதாகவும் பிரசுரம் செய்திருந்தோம். இரண்டு காரணங்களினால் இது குறிப்பிட்ட ஸமயத்தில் வெளியிடமுடியாமல் சிறிது தாமதமாகிற தென்பதை லஜ்ஜையுடன் தெரிவித்துக் கொள்ள வேண்டியதாகிறது. அந்த இரண்டு காரணங்களாவன, (1) இந்த க்ரந்தமாலை ஷோலாபூர் பிரெஸ்ஸிலும் ஸ்ரீரங்கம் பிரெஸ்ஸிலுமாக இரண்டு பகுதியாய் அச்சிடப்பட்டு வருகிறது. ஸ்ரீரங்கம் பிரெஸ்ஸில் அச்சிடும் பாகம் அனேகமாய் முடிவுபெற்றது. தூரதேசமான ஷோலாபூரிலிருந்து ப்ரூப் வந்து போவதற்குத் தாமதமாவதால் அங்கு நடக்கும் பாகம் முடிவுபெறுவதற்கு இன்னும் இரண்டு மூன்று மாதம் தாமதிக்கும் போலிருக்கிறது. (2) இரண்டாவது காரணம் நாம் எதிர்பார்த்தபடி ஷேர்தாரர்கள் சேராமையினால் போதுமான பொருளுதவி கிடைக்க வில்லையென்பது. ஆனாலும் இதனால் இக்காரியம் தடைபடாது. ஜூலை மாதத்திற்குள் இது தவறாது வெளிவந்து விடும். ஆஸ்திகமஹோதாரர்கள் இதில் ஷேர் எடுத்துக்கொள்ளும்படி பிரார்த்திக்கிறோம். ஷேர் 1-க்கு ரூ. 100 செலுத்தவேணும். ஒருவரே பலஷேர்களும் எடுத்துக்கொள்ளலாம். ஷேர் 1-க்கு பரிபூர்ண க்ரந்தமாலை (பயிண்டுடன்) 6 பிரதிகள் கொடுக்கப்படும்.

இப்படிக்கு,

20—4—55 P. B. அண்ணங்கராசாரியர்,

காஞ்சிபுரம்.

Sri Bhagavad Ramanuja Grantha-mala

It has been already announced that the complete works of Sri Ramanuja are being printed in a globe edition which would be published on Sri Ramanuja's birth day (27—4—1955).

We have now to regretfully announce that we have not been able to keep up our promise, for reasons beyond our control. Printing is going on in two places–Srirangam and Sholapur. The Srirangam press has nearly completed its portion; but the Sholapur press is lagging behind, because much dealy is caused in the transmission of proof sheets from there to Kanchee and vice versa.

Another great difficulty we have met with is that the public has not come forward with sufficient zeal to take up the financial responsibility. by purchasing shares. But, because of this we will not allow the work to suffer. At any rate the complete volume will be ready by the end of July 1955.

A share costs Rs. 100/- only. A single person may purchase any number, including fractions of a share. Each share-holder will be presented with copies of the printed, bound volume at the rate of six copies per share.

It is up to all Asthikas to lend a helping hand in this great endeavour, by purchasing shares.

Kancheepuram, 20-4-55.

P. B. ANANGARACHARYA,
Editor Granthamala.

மதிப்புரை.

திருச்சந்தவிருத்த வியாக்கியானம்.

திருமழிசைப்பிரானருளிச்செய்த திருச்சந்தவிருத்தம் பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த மிகச்சிறந்த வியாக்யானத்துடன் புத்தூர் அக்ரஹாரத்தில் ஸ்ரீநிவாஸம் அச்சுக்கூடத்தில் தமிழ் லிபியில் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றது. இதன் விலை 3 ரூபா. தபாற் செலவு அணா 6. பதிப்பாசிரியர் ஸ்ரீமான் உ. வே. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி. கிடைக்குமிடம் இதுவே.

பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளெல்லாம் மிகத்திருத்தமான முறையில் புத்தூரில் நாலைந்துவருஷகாலமாகப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றனவென்பது ஜகத்ப்ரஸித்தமே. அந்த ஸ்ரீஸூக்திமாலையில் பதினோராவது மலராகத் திருச்சந்தவிருத்த வியாக்யானம் வெளிவந்துள்ளது. ஊக்கமாகத் தேடிப்பார்த்தாலும் பிழைகாணமுடியாதிருத்தல் இப்பதிப்புக்குத் தன்னேற்றம். முகவுரை, பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டுகளுடனும் இது வெளிவந்திருக்கின்றது. இந்த வியாக்கியானத்தில் ஸம்ஸ்க்ருத ப்ரமாண வசனங்கள் 340 உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆகரக்குறிப்புடன் பூர்த்தியாக வெழுதிப் பொருள்விளக்கமுங் காட்டப்பட்டிருப்பது விசேஷித்துக்குறிப்பிடத்தக்கது. பதிப்பாசிரியரான ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் தமது திருத்தந்தையார் தொடங்கின பணியை விடாமுயற்சியுடன் மிகச்சிறப்பாக நடத்திவருவது மிகவும் பாராட்டத்தக்கது. இச்சிறந்த ஸ்ரீகோசத்திற்கு மூன்று ரூபாய் விலைவைத்திருப்பது பெரிதன்று, மிகக் குறைவென்றே சொல்லலாம். ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவரும் விலைகொடுத்து வாங்கி இவருடைய உத்ஸாஹத்தை மேன்மேலும் தழைத்தோங்கச் செய்யவேணுமென்பது எமது கோரிக்கை.

அத்யந்த சோசநீயம்.

திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமி யென்றால் ஸ்ரீ வைஷ்ணவவுலகில் அறியாதாரில்லை. இவருடைய அத்விதீயரான திருக்குமாரர் T. விஜயராகவன் மஹாமேதாவியென்று உலகம் பரக்க புகழ்படைத்தவர் 20-4-55ல் சென்னையில் ஆசாரியன் திருவடி சார்ந்தார் என்ற பரிதாபமான வார்த்தையை மிக நிர்வேதத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மஹா மேதாவிகளுக்கு நேர்கின்ற வியாதி ஹ்ருதயகோச சைதில்யமென்பது. அதுவே இந்த மஹானையும் விண்ணுலகெய்துவித்தது. இவர் த்வீபாந்தரங்களிலும் சென்று தம்முடைய மேதாவிலாஸத்தைப் பரவச்செய்துகொண்டவர். கணித சாஸ்த்ரத்தில் நிகரற்ற நிபுணர். மிக்க இளமையிலேயே திருத்தந்தையாரிடத்தில் ஸம்ஸ்க்ருத காவ்யநாடகாலங்காரங்கள் வாசித்து ஸம்ப்ரதாயக்ரந்தங்களும் கேட்டவராதலால் இவர்க்கு உபய வேதாந்த விஜ்ஞானமும் மிகச்சிறந்த முறையில் அமைந்திருந்தது. ஸமய விசேஷங்களில் மிகவழகிய உபந்யாஸங்களையும் இவர்வாயிலாக பக்தர்கள் அநுபவித்துக்கொண்டிருந்தார்கள். இன்னும் வெகுகாலம் இவ்விபூதியில் விளங்கியிருந்து பலவகை லோகோபகாரங்கள் செய்து பெரும்புகழ் படைக்கத்தக்க இவரை எம்பெருமான் 52-ம் பிராயத்திலேயே தன் திருவடிவாரம் சேர்த்துக்கொண்டது அவனுடைய நிரங்குச ஸ்வாதந்திரியத்தையே நிலைநாட்டுகின்றது. இவர்க்கு 70 வயதுள்ள திருத்தாயார் ஜீவித்திருக்கிறாரென்பது இன்னமும் நமது சோகத்தை வளரச்செய்கின்றது. ப்ரதீகாரமற்ற சோகஸம்பவங்களை விளைவிப்பதே எம்பெருமானுடைய பணியாகவிருக்கின்றது. எந்த நிலைமையிலும் அவனைப் பரம தயாளுவென்று போற்றுங்குடியன்றோ நமது.

ஸ்ரீ:

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ப்ரபந்நகாயத்ரீஸித்த பகவத் ராமாநுஜர்

நூற்றந்தாதியிராமாநுசமாலை

(ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியர்.)

ப்ரபந்நகாயத்ரியென்று ப்ரஸித்தமான இராமானுச நூற்றந்தாதியில் பாசுரந்தோறுமுள்ள பகவத் ராமாநுஜ விசேஷணங்களையிட்டு எம்பெருமானார் பெருமையை யநுபவிப்பது.]

1. மாறனடிபணிந்துய்ந்த விராமானுசன்.

எம்பெருமானார்க்கு அதிசயாவஹமான சரித்ர வைபவங்கள் பல்லாயிரமிருந்தாலும் ஆழ்வார் திருவடிகளில் ப்ராவண்யத்தையே அவர் தமக்குச் சிறந்த வைபவமாக அத்யவஸித்திருந்ததனால் அவருடைய அத்யவஸாயத்திற்குப் பொருந்த இந்த விசேஷணமமைந்தது. இதனை யடியொற்றியே நம் மணவாளமா முனிகளும் *ஸ்ரீ மாதவாங்க்ரி ஜலஜ த்வயநித்யஸேவாப்ரேமா விலாசய பராங்குசபாதபக்தம் * என்று தொடங்கினார். நம்மாழ்வார் பிறந்த பொழுதே தொடங்கி அழுதல் பால் குடித்தல் முதலிய லோக வியாபாரமொன்று மின்றி உலக நடைக்கு மாறாக இருந்ததனால் இவர்க்கு மாறனென்று திருநாமமாயிற்று. மற்றும் பல காரணங்களைக் கொண்டும் ஆழ்வார்க்கு மாறனென்னுந் திருநாமத்தை உபபாதிப்பதுண்டு; அவருடைய திருவடிகளை யாச்ரயித்து உஜ்ஜீவித்தவர் எம்பெருமானார். நம்மாழ்வாருடைய திருவடி நிலைக்கு இராமாநுசனென்றே வ்யபதேசம்.

2. குறையல்பிரானடிக்கீழ் விள்ளாதவன்பனிராமானுசன்.

*மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங் கூறவவதரித்த * என்கிறபடியே நம்மாழ்வாருடைய தமிழ் வேதத்திற்கு அங்கமாக ஆறு திவ்யப்ரபந்தங்களை யருளிச் செய்த திருமங்கையாழ்வாருடைய திருவடிகளில் ப்ராவண்ய முடையவர் எம்பெருமானார். திருமங்கையாழ்வாருடைய திருவவதாரஸ்தலம் திருக்குறையலூ ரெனப்படும். அதில் அவதரித்ததனால் அவ்வாழ்வார் குறையல் பிரானெனப்பட்டார்; அவருடைய திருவடிகளிலே என்றும் விட்டுநீங்காத பக்தியையுடையவர் ஸ்வாமி. திருவாலி திருநகரியி லெழுந்தருளி யிருக்கின்ற திருமங்கை மன்னனுடைய பாதாரவிந்த பீடத்தின்கீழ் எம்பெருமானாருடைய திருக்கோலம் ஏறி யருளப்பண்ணப்பட்டிருப்பது காண்க.

3. பொருவருஞ் சீராரியன் செம்மையிராமானுசன்.

ஒப்பற்ற திருக்குணங்களை யுடையவரும் சிறந்த அனுஷ்டான முடையவரும் ஆச்ரிதரோடு ருஜுவாகப் பரிமாறுந் தன்மைவாய்ந்தவருமான எம்பெருமானு ரென்கை. *அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய *. என்று கூரத்தாழ்வானருளிச்செய்த* தயைக ஸிந்துத்வமே பொருவருஞ்சீரென்பது. [ஆரியன்] * கர்த்தவ்ய மாசரந் காமம் அகர்த்தவ்யமநாசரந், திஷ்டதி ப்ரக்ருதாசாரே யஸ் ஸ ஆர்ய இதி ஸ்ம்ருத: * என்கிறபடியே ஆசார சீலரென்கை. செம்மையாவது கரண த்ரயஸாரூப்யம். மநோவாக் காயங்களின் வ்ருத்தி ஒருபடிப்பட்டிருப்பவ ரென்கை. ஆக மூன்று விசேஷணங்கள் விளங்கப்பெற்றவர்.

4. ஊழிமுதல்வனையே பன்னப்பணித்தவிராமானுசன்.

காலோபலக்ஷிதங்களான ஸகல பதார்த்தங்களுக்கும் காரணபூதனுகையாலே ஊழி முதல்வனெனப்படுகிற ஸ்ரீமந்நாராயணனையே விமுகர்களா யிருந்த ஸம்ஸாரிகளுங் கூட ஸதா அநுஸந்திக்கும்படி உபதேசாதி முகத்தாலே செய்தருளினவர் ஸ்வாமி. பகவத்ச்ராவண்யஹீநர்களாயிருந்த * உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்ட லத்தவர்க்கெல்லாம் பகவத்ச்ராவண்யத்தை யூட்டின மஹாநுபாவரென்கை.

5. எனக்குற்ற செல்வமிராமானுசன்.

ஆளவந்தார் *மாதாபிதா.... விபூதிஸ் ஸர்வம் யதேவ நியமேந* என்று ஆழ்வார்திரு வடிகளையே ஸ்வரூபப்ராப்தமான ஸகலஸம்பத்துக்களுமாகக் கொண்டிருந்தது போல ஸ்ரீவைஷ்ணவ வுலகமெல்லாம் எம்பெருமானாராகிய தம்மையே ஸ்வரூபாநு ரூபமான ஸகலஸம்பத்துமாகக் கொள்ளலாம்படி நிற்பவர் ஸ்வாமி

6. இன்கவிகளன்பால் மயல்கொண்டு வாழ்த்துமிராமானுசன்.

இன் கவிபாடும் பரம கவிகளான சில மஹான்கள் [ஆழ்வான் ஆண்டான் எம்பார் பிள்ளான் போல்வார்] சொல்லின்பமும் பொருளின்பமும் நன்கு பொருந்துமாறு கவிதைகளை அமைத்து வாழ்த்தும்படியாக வுள்ளவர் ஸ்வாமி.

7. பழியைக்கடத்து மிராமானுசன்.

இராமானுச னென்று உள்ளத்தில் அநுஸந்தித்தவாறே *போய பிழையும் புகுதரு வானின்றனவும் தீயினில் தூசாகும் * என்னுமாபோலே ஸகல பாபங்களும் தொலை யும்படியாக வுள்ளவர் ஸ்வாமி.

8. பொய்கைப்பிரானெரித்ததிருவிளக்கைத் தன்திருவுள்ளத்தேயிருத்துமிராமானுசன்.

அஜ்ஞாநாந்தகாரத்தை அறவே அகற்றுவதற்காகப் பொய்கையாழ்வார் "வையம் தகளியா வார்கடலே நெய்யாக வெய்யகதிரோன் விளக்காக" என்று தொடங்கி ஏற்றிவைத்த திருவந்தாதி திவ்யப்ரபந்தமென்னும் திருவிளக்கைத் தமது திருவுள் ளத்தினுள்ளே ஒருபோதும் அணையாகபடி ஸ்தாபித்தருளினவர் ஸ்வாமி. முதல் திருவந்தாதியை யநுஸந்தித்து ஞானவிளக்கம் கொண்டவரென்கை.

9. ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி
தாள்கள் நெஞ்சத்துறைய வைத்தாளு மிராமானுசன்.

நன்புருகி ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு என்று தொடங்கி இரண் டாந் திருவந்தாதியாகிற ஞானச்சுடர் விளக்கை யேற்றிய பூதத் தாழ்வாருடைய திருவடிகளைச் சிந்தை செய்பவர் ஸ்வாமி. * பூதத் திருவடி யென்ற விடத்தில் திரு வடியென்றது ஸ்வாமி யென்னும் பொருளுடையது ; அடிகள் என்னுமா போலே. இப்பாசுரத்தில் " இராமானுசன் புகழோதும் நல்லோர் மறையினைக் காத்து இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே" என்றருளிச் செய்ததனால் * ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய ரென்னும் விருது இராமானுசனுடையார்க்கே ஏற்கு மென்றதாயிற்று.

10. தமிழ்த் தலைவன் பொன்னடி போற்றுமிராமானுசன்.

"கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக் கண்டமை காட்டுந் தமிழ்த் தலைவன்" என்கையாலே "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று தொடங்கியருளின பேயாழ்வாரே யிங்குத் தமிழ்த் தலைவராகக் கருதப்பட்டார்; அவ்வாழ்வாருடைய திருவடிகளைத் துதிக்குமவர் ஸ்வாமி யென்கை.

11. பாண்பெருமாள் சரணம் பதுமத்தாரியல் சென்னியிராமானுசன்.

நால் வேதங்களிலே பொதிந்து கிடக்கும் நற்பொருள்களையெல்லாம் அமலனதிபிரானில் சுருக்கியருளிச் செய்த திருப்பாணாழ்வாருடைய சரணாரவிந்தங்களாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியையுடையவர் ஸ்வாமி.

12. மழிசைக்கிறைவனிணையடிப் போதடங்குமிதயத்திராமானுசன்.

திருமழிசைப்பிரானுடைய பாதாரவிந்தங்கள் அடங்கியிருக்கப்பெற்ற திருவுள்ளமுடையவர் ஸ்வாமி.

13. துளபமாலையும் தமிழ் மாலையும் அரங்கத்தையன் கழற்கணியும்
பரன்தாளன்றி யாதரியா மெய்யனிராமானுசன்.

* துளபத் தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி யென்றும் *தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி யென்றும் தாமே யருளிச்செய்ததற்குப் பொருந்தத் திருத்துழாய் மாலைகளையும், திருமாலை திருப்பள்ளி யெழுச்சியாகிற சொல் மாலைகளையும் ஸ்ரீ ரங்கநாதன் திருவடிகளிலே ஸமர்ப்பித்த தொண்டரடிப் பொடியாழ்வாருடைய திருவடிகளையன்றி மற்று எதையும் விரும்பாத ஸத்யசீலர் ஸ்வாமி.

14. கொல்லிகாவலன் சொல்பதிக்கும் கலைக்கவிபாடும்
பெரியவர்பாதங்களே துதிக்கும் பரமனிராமானுசன்.

ஸ்ரீ குலசேகராழ்வாருடைய திவ்ய ஸூக்திகளில் ப்ரவணர்களான பெரியார் பக்கலில் அன்பு பூண்டவர் ஸ்வாமி.

15. தொல்லை மாலைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன்தாள்
பேராதவுள்ளத்தி ராமானுசன்.

அகில ஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநனை எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்வதையே நியதஸ்வபாவமாகவுடையரான பெரியாழ்வாருடைய திருவடிகள் விட்டகலாத திருவுள்ளத்தை யுடையவர் ஸ்வாமி.

16. சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளலிராமானுசன்.

சூடிக்கொடுத்த நாச்சியாருடைய பரமக்ருபைக்குப் பாத்ரபூதராகி வாழ்கின்ற பரமோதாரர் ஸ்வாமி. [*நூறுதடா நிறைந்தவக்காரவடிசில் ஸமர்ப்பித்தனல்.]

17. தண்டமிழ் செய்த நீலன்தனக்குலகிலினியா னெங்களிராமானுசன்.

பல திருப்பதிகளிலும் புக்குக் கவிபாடின நீல னென்னும் திருநாமத்தையுடைய திருமங்கையாழ்வார் பக்கலில் பேரன்பு வாய்ந்தவர் ஸ்வாமி.

18. சடகோபனைச் சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவர் சீரையுதவுமிராமானுசன்.

நம்மாழ்வாரைத் தமது ஹ்ருதயத்தினுள்ளே தியானிப்பவரான மதுரகவிகளின் ஆசார்ய நிஷ்டையாகிற மஹாகுணத்தை எடுத்துரைக்க வல்லவர் ஸ்வாமி. [மதுரகவிகள் பெரியவர் என்கிற சொல்லால் இங்குக் குறிக்கப்பட்டனர்.]

19. உறுபெருஞ் செல்வம் முதலியன வெல்லாம் மாறன் செந்தமி
ழாரணமேயென்று அறிதர நின்ற விராமானுசன்.

மஹாஸம்பத்தும் மாதாபிதாக்களும் ஸதாசார்யனும் ஸர்வேச்வரனுமாகிய வெல்லாமும் ஆழ்வாரருளிய செந்தமிழ் வேதமாகிய திருவாய்மொழியே தமக்கு என்று யாவருமறியும்படி நின்றவர் ஸ்வாமி.

20. சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்வாரிப்பருகுமிராமாநுசன்.
மஹாகுண சாலியான ஸ்ரீமந்நாத முனிகளைப் பரிபூர்ணாநுபவம் செய்பவர் ஸ்வாமி.

21. எதிகட் கிறைவன்யமுனைத்துறைவனிணையடியாங்கதி பெற்றுடைய விராமாநுசன்.
உத்தமாச்ரமிகளுள் உத்தமரான ஆளவந்தாருடைய உபயபாதங்களாகிற பரம ப்ராப்யத்தைப் பெற்று விளங்குபவர் ஸ்வாமி.

22. வாணன் பிழை பொறுத்த தீர்த்தனை யேத்துமிராமாநுசன்.
பாணாஸுரயுத்தத்திலே அவனுடைய அபராதங்களை க்ஷமித்தருளின பரம பாவனனான கண்ணபிரானைத் துதிப்பவர் ஸ்வாமி.

23. வைப்பாய வான்பொருளென்று நல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும் வைக்கு மிராமாநுசன்.
“எம்பெருமானார் தாம் நமக்கு ஆபத்ரக்ஷகமான அக்ஷயதனம்” என்று கொண்டு பரமபக்தர்கள் எப்போதும் சிந்திக்க வுரியவர் ஸ்வாமி.

24. பொய்த்தவம் போற்றும் புலைச் சமயங்கள் நிலத்தவியக்
கைத்த மெய்ஞ்ஞானத் திராமாநுசன்.
கபடமான அநுஷ்டானங்களை நடத்திப் போருகிற நீசமதஸ்தர்கள் இந்நிலவுலகத்தில் வேரற்றொழியும்படி நிரஸித்தருளின யதார்த்தஜ்ஞாந நிதியானவர் ஸ்வாமி.

25. காரேய் கருணையிராமாநுசன்.
மேகத்தையொத்த கருணையை யுடையவர் ஸ்வாமி. [ஜலஸ்தலவிபாகம் பாராமல் ஸர்வத்ர ஸமமாக வர்ஷித்தல், கைம்மாறு கருதாமை முதலிய அனேக அம்சங்களில் ஸ்வாமிக்கு மேகத்தோடு ஸாம்யம் காண்க.]

26. திக்குற்ற கீர்த்தியிராமாநுசன்.
திசைகள் தோறும் விரிந்த மஹாகீர்த்தி பொருந்தியவர் ஸ்வாமி.

27. கொள்ளக் குறைவற்றிலங்கிக் கொழுந்து விட்டோங்கிய
வள்ளல்தனம்மிக்கவிராமாநுசன்.
கொள்ளக்கொள்ளக் குறையாமல்தானே விளங்கி மேன்மேலும் இளகிப்பதித்து வளர்ந்து வருமதான ஔதார்ய குணமுடையவர் ஸ்வாமி.

28. பின்னைதன் காதலன் பாதம் நண்ணா வஞ்சர்க்கரியவிராமாநுசன்.
நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனான கண்ணபிரானுடைய திருவடிகளில் அன்பில்லாத ஆத்மாபஹாரக் கள்வர்களுக்குக் கிட்டுதற்கு அரியரானவர் ஸ்வாமி.

29. தென்குருகைப்பிரான் பாட்டெனும் தன்பத்தியென்னும்
வீட்டின்கண் வைத்தவிராமாநுசன்.
நம்மாழ்வாருடைய திருவாய்மொழியைத் தம்முடைய பக்தியாகிற திருமாளிகையிலே ஸ்தாபித்தருளியவர் ஸ்வாமி.

30. மன்பல்லுயிர்கட் கிறையவன் மாயனென மொழிந்த அன்பனனகனிராமாநுசன்.
ஸகல ஜீவராசிகளுக்கும் சேஷியாயிருப்பவன் ஸ்ரீமந் நாராயணனொருவனேயென்று ஸ்ரீபாஷ்யாதி முகத்தாலே அருளிச்செய்த பரமகாருணிகர் அகில ஹேயப்ரத்யநீகரான ஸ்வாமி.

31. தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளனிராமாநுசன்.
*ஸ்ரீஹஸ்திசைலசிகரோஜ்ஜ்வலபாரிஜாதமான பேரருளாளப் பெருமாளுடைய திருவடிகளில் அன்பு பூண்டவர் ஸ்வாமி.

32. செறுகலியால் வருந்திய ஞாலத்தை வண்மையினால்
வந்தெடுத்தளித்த வருந்தவனெங்களிராமானுசன்.

தருமநெறிக்குத்ரோஹியான கலிபுருஷனுடைய சேஷ்டைகளாலே வருந்திய பூமியைத் தமது நிர்ஹேதுக க்ருபையினால் ரக்ஷித்தருளினவர் ஸ்வாமி.

33. ஆழியும் நாந்தகமும் தண்டும் வில்லும் சங்கமுமான விராமானுசன்.

பஞ்சாயுதாழ்வார்களின் அம்சமாகத் திருவவதரித்தவர் ஸ்வாமி. [இப்பாசுரத்தை நோக்கியே யதிராஜ ஸப்ததியில் * அப்ருதக் ப்ரதிபக்ஷ யக்ஷ்மயத்வைர் வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:* என்கிற ச்லோகமவதரித்தது.]

34. தென்புலத்தில் பொறித்தவப் புத்தகச் சும்மை பொறுக்கி
நலத்தைப் பொறுத்தநயப்புகழுற்றவிராமானுசன்.

ஸம்ஸாரிகள் செய்யும் பாவங்களைக் குறித்து யமலோகத்தில் சித்ரகுப்தன் எழுதிவைத்த சுருணைகளைக் கொளுத்திவிட்டு, அதனால் மிக விளங்கப் பெற்ற புகழுடையவர் ஸ்வாமி. ஆச்ரித ஜநஸர்வபாப ப்ரணாசக ரென்கை.

35. பொன்னரங்கமென்னில் மயலே பெருகுமிராமானுசன்.

'திருவரங்கம் பெரிய கோயில்' என்றவாறே வியாமோஹம்பெருகி நிற்பவர் ஸ்வாமி.

36. ஆரணச்சொல்லொண்பொருள்கொண்டு காசினியோர்பின்
படருங்குணனெம்மிராமானுசன்.

வேதங்களிலுள்ள சிறந்த அர்த்தங்களைக்கொண்டு ஸம்ஸாரிகளைப் பின் தொடரும் சீலகுணமுடையவர் ஸ்வாமி. வேதார்த்தங்களைக்கொண்டு ஸம்ஸாரிகளைத் திருத்துபவரென்கை.

37. இராமாயணமென்னும் பத்திவெள்ளங்குடிகொண்ட கோயிலிராமானுசன்.

ஸ்ரீராமாயண மென்கிற பக்திஸமுத்ரம் நித்யவாஸம் செய்யப்பெற்ற திவ்ய ஸ்தானமானவர் ஸ்வாமி. [ஸ்ரீராமாயணத்திற்கு பக்தி ஸமுத்ரமென்று பெயரிடப் பட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.]

38. புண்ணியர்தம் வாக்கில் பிரியாவிராமானுசன்.

தம்மை இடைவிடாது அநுபவிக்கும் பாக்யசாலிகளினுடைய வாக்கைவிட்டுப் பிரியாதவர் ஸ்வாமி. [பக்தர்களினால் அநவரதம் துதிக்கப்படுமவரென்கை.]

39. தெருள்தந்து சேமங்கள் செய்யுமிராமானுசன்.

நமக்கு யதார்த்தஜ்ஞானத்தை யளித்து க்ஷேமங்களைச் செய்யவல்லவர் ஸ்வாமி.

40. கண்ணனுக்கே ஆமது காமமறம்பொருள் வீடிதற்கென்றுரைத்தவிராமானுசன்.

தர்மார்த்தகாம மோக்ஷங்களாகிற நால்வகைப் புருஷார்த்தங்களுக்குள் பகவத் விஷயமானதே காமமென்பது; மற்ற மூன்றும் இந்த காம புருஷார்த்தத்திற்கு சேஷ பூதங்கள் என்று உபந்யஸித்தருளினவர் ஸ்வாமி.

41. அண்ணலிராமானுசன்.

ஸர்வஸ்வாமி யென்ன நிற்பவர் ஸ்வாமி. [எம்பெருமான் மநுஷ்யாதிகளான பலயோனிகளிலு மவதரித்துக் கண்காண நிற்கச்செய்தேயும் அவனைக் காண மாட்டாதிருந்த உலகர்களெல்லாரும் எம்பெருமானுருபதேசங்கொண்டே அவனைக் காணப்பெற்றதனால் இவரே ஸர்வஸ்வாமி யென்க.]

42. தூயவன் தீதிலிராமானுசன்.

பரமபரிசுத்தரும் அகில ஹேயப்ரத்யநீகருமானவர் ஸ்வாமி.

43. அறஞ்சீறு முறுகலியைத் துரக்கும் பெருமையிராமானுசன்.

தரும மார்க்கத்திற்கு த்ரோஹியான கலிபுருஷனை ஓட்டிவிடும்படியான பெருமை வாய்ந்தவர் ஸ்வாமி. [இப்பாசுரத்தை யடியொற்றியே * ராமாநுஜமுனிர் ஜீயாத் யோ ஹரோர் பக்தியந்த்ரிதாத், கலிகோலாஹலக்ரீடா முதாக்ரஹ மபாஹரத் * என்று பட்டரருளிச் செய்தது.]

44. சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கு மெல்லையில்லா
அறநெறியாவுந் தெரிந்த விராமானுசன்.

இயலிசை நாடகமென்கிற முத்தமிழையும் நான்கு வேதங்களையும் அபரிமிதங்களான தர்ம சாஸ்த்ரங்களையும் மற்றுமெல்லாக் கலைகளையு மறிந்தவர் ஸ்வாமி.

45. சொல்லால் கூறும் பரமல்லாத செம்மையனிராமானுசன்.

அநுபவித்தே உருகவேண்டும்படியாய் வாய்கொண்டு சொல்லத்தரமல்லாத செம்மைக் குணமுடையவர் ஸ்வாமி.

46. திசையனைத்து மேறுங்குணனிராமானுசன்.

எல்லாத் திசைகளிலும் பரவிய திருக்கல்யாணகுணங்களை யுடையவர் ஸ்வாமி.

47. இறைஞ்சப்படும் பரனீசனரங்கனென்று அறஞ்செப்பு மண்ணலிராமானுசன்.

எல்லாராலும் வணங்கத்தக்க பரதெய்வம் ஸ்ரீ ரங்கநாதனே யென்று ஸாக்ஷாத் தர்மத்தை யருளிச் செய்தவர் ஸ்வாமி.

48. புன்மையிலோர் பகரும் பெருமையிராமானுசன்.

மஹான்களே பேசவேண்டும்படியான பெருமை வாய்ந்தவர் ஸ்வாமி.

49. தென்னரங்கன் கழல்சென்னி வைத்து அதில் மன்னுமிராமானுசன்.

ஸ்ரீ ரங்கநாதரான பெரிய பெருமாளுடைய திருவடிகளை சிரஸாவஹித்துக் கொண்டு அத்திருவடிகளிலேயே ப்ரவணராயிருப்பவர் ஸ்வாமி.

50. பாவு தொல்சீ ரெதித்தலைநாத விராமானுசன்.

உலகமெங்கும் பரவின நித்யகல்யாண குணங்களை யுடையராய் உத்தமாச்ரமிகளுள் உத்தமரானவர் ஸ்வாமி.

51. முழுதுணர்ந்த வடியர்க்கமுதமிராமானுசன்.

பகவத்ஸ்வரூப ரூப குணவிபூதிகளில் ஒன்றுங்குறையாதபடி முழுதும் தெரிந்து கொண்ட பாகவதர்களுக்குப் பரமபோக்யரானவர் ஸ்வாமி.

52. அறுசமயங்கள் பதைப்பப் பார்த்துப் பார் முழுதும்
புகழ்கொண்டு போர்த்தவிராமானுசன்.

வேதபாஹ்யங்களான ஷட்தர்சனங்களும் தொலையும்படி கடாக்ஷித்துப் பூமண்டலம் முழுதும் தமது கீர்த்தியேயாம்படி செய்தருளினவர் ஸ்வாமி.

53. கற்றவர்காமுறுசீல னற்புதன் செம்மையிராமானுசன்.

ஞானிகளாசைப்படும் திருக்குணங்களையுடைய ஆச்சர்ய சேஷ்டிதர் ஸ்வாமி.

54. மண்ணுலகிலேட்டிய சீலத்திராமானுசன்.

இந்நிலவுலகில் மேன்மேலும் திரண்டெழுந்த திருக்குணமுடையவர் ஸ்வாமி.

55. தென்னரங்கன் தொண்டர்குலாவுமிராமானுசன்.

ஸ்ரீரங்கநாததாஸர்களான பாகவதோத்தமர்கள் கொண்டாடுகின்றவர் ஸ்வாமி.

56. புவனமெங்கு மாக்கிய கீர்த்தியிராமானுசன்.

உலகமெங்கும் பரவின புகழை யுடையவர் ஸ்வாமி.

57. நற்றவர்போற்றுமிராமானுசன்.
தவங்களுக்குள்ளே தலையான தவமாகிய ப்ரபத்தியிலே ஊன்றினவர்கள்போற்ற நின்றவர் ஸ்வாமி.

58. பேதையர் சொல்லுமல்லலெல்லாம் வாதில்வென்ற விராமானுசன்.
வேத பாஹ்யர்களும் வேத குத்ருஷ்டிகளுமான மூர்க்கர்கள் சொன்ன அபார்த்தங்களை வாத கோஷ்டிகளிலே வென்றொழித்தவர் ஸ்வாமி.

59. மிக்கநான்மறையின் சுடரொளியால் கலியிருளைத் துரந்தவிராமானுசன்.
நான்கு வேதங்களின் அளவற்ற தேஜஸ்ஸைக்கொண்டு கலிகல்மஷங்களைப்போக்கியருளினவர் ஸ்வாமி.

60. குணந்திகழ்கொண்டலாய் எம்குலக் கொழுந்தானவிராமானுசன்.
ஆத்ம குணங்கள் விளங்க நின்று ஔதார்யத்திலே காளமேகத்தை யொத்து நமது குலத்துக்குத் தலைவராய் விளங்குமவர் ஸ்வாமி.

61. அருமுனிவர் தொழுந்தவத்தோனெம்மிராமானுசன்.
அருமையான நிஷ்டையையுடைய மஹான்களாலே ஸேவிக்கப்பெற்ற மஹா தபஸ்வியானவர் ஸ்வாமி.

62. இருவினைப்பாசங்கழற்றி இறையும் வருந்தாவகையிருத்துமிராமானுசன்.
புண்ணியம் பாவமென்று இருவகையான கருமபாசங்களினின்றும் விடுவித்து ஈஷத்தும் வருந்தாதபடி செய்தருள்பவர் ஸ்வாமி.

63. அறுசமயச் செடியைத் தொடரும் மருள் செறிந்தோர்
சிதைந்தோட வந்திப்படியைத் தொடருமிராமானுசன்.
பாஹ்ய ஷண்மதங்களான தூறுகளிலே படிந்த அஜ்ஞானிகள் தொலையும்படி இப்பூமியிலே வந்தவதரித்து நம்போல்வாரை விஷயீகரிப்பதற்கு ஸமயம் பார்த்திருப்பவர் ஸ்வாமி.

64. பண்டருமாறன் பசுந்தமிழானந்தம் பாய்மதமாய் விண்டிடும் வேழமிராமானுசன்.
நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய்மொழியில் விளைந்த ஸந்தோஷம் பெருகு மத நீராக வொழுகப்பெற்ற மத்தகஜம் போன்றவர் ஸ்வாமி.

65. தொல்லை வாதியர் வாழ்வற மறையவர் தம் தாழ்வற ஞானம் தந்த நம்மிராமானுசன்.
துர்வாதிகளின் வாழ்ச்சி அற்றுப்போகவும் வைதிகர்களின் தாழ்வு தீரவும் ஞானக்கலைகளை யருளிச் செய்தவர் நம் ஸ்வாமி.

66. தன் தகவென்னும் சரண்கொடுத்து அத்தானங்கொடுக்குமிராமானுசன்.
எம்பெருமானைப் போலே சிரமப்படுத்தாமல் க்ருபா மாத்ர ப்ரஸந்நராய்க் கொண்டு மோக்ஷங்கொடுப்பவர் ஸ்வாமி.

67 மாயவன் தன்னை வணங்கவைத்த கரணமிவை உமக்கன்றென்றவிராமானுசன்.
எம்பெருமான் தன்னை வழிபடுவதற்காகவே ஏற்படுத்திவைத்த கரணக்ராமங்கள் ஸம்ஸாரிகளின் வழிபாட்டிற்காகவல்லவென்று உபதேசித்தவர் ஸ்வாமி.

68. கீதையின் செம்மைப் பொருள் தெரியப் பாரினில் சொன்னவிராமானுசன்.
பகவத் கீதையினுடைய ஸ்வரஸமான அர்த்தத்தை அனைவரும் எளிதாகத் தெரிந்துகொள்ளுமாறு கீதாபாஷ்ய முகத்தாலேயருளிச் செய்தவர் ஸ்வாமி.

69. அரங்கன் தன் சரண் தந்து வந்தெடுத்தவெந்தையிராமானுசன்.
ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளைக் காட்டிக்கொடுத்து நம்போல்வாரை உஜ்ஜீவிப்பித்த மஹோபகாரகர் ஸ்வாமி.

70. எண்ணில்பல் குணத்த பெருங்கருணையிராமானுசன்
எண்ணிறந்த பலதிருக்கல்யாண குணங்களையுடைய தயாநிதியானவர் ஸ்வாமி.

71. பெருந்தகைவண்மை யிராமானுசன்.
கம்பீரஸ்வபாவமும் ஔதார்யமும் பொருந்தியவர் ஸ்வாமி.

72. தீய சமயக்கலகரைக் கைத்துத் தூயமறை நெறிதன்னை யுய்த்தவிராமானுசன்.
துஷ்டமதங்களிலிருந்துகொண்டு கலஹஞ் செய்பவர்களை யொழித்திட்டுப் பரிசுத்தமான வேதமார்க்கத்தை ப்ரதிஷ்டாபனம் செய்தவர் ஸ்வாமி.

73. இத்தாரணியோர்கட்குத் தான் சரணு யுண்மைநன்ஞானமுரைத்தவிராமானுசன்.
இந்நிலவுலகத்திலுள்ளவர்கட்கெல்லாம் தாமே ரக்ஷகராகி யதார்த்தஜ்ஞானத்தையுபகரித்தவர் ஸ்வாமி.

74 கொண்டலனைய வண்மையேரார் குணத்தெம்மிராமானுசன்.
மேகத்தை யொத்த ஔதார்யமும் மற்றும்பல நற்குணங்களுமுடையவர்ஸ்வாமி.

75. தன்புகழே வந்து மொய்த்தலைக்குமிராமானுசன்.
தம்முடைய திவ்ய கீர்த்திகளே எங்கும் சூழ்ந்துகொண்டு யாவரையும் ஆகர்ஷிக்கும்படியானவர் ஸ்வாமி.

76. வேங்கடப் பொற்குன்றமும் வைகுந்தநாடும் குலவிய பாற்கடலுமாய்
இன்பந்தரு மிணைமலர்த்தாளிராமானுசன்.
திருவேங்கட மலையும் ஸ்ரீவைகுண்டமும் க்ஷீராப்தியும் போன்று பரமபோக்யமான பாதாரவிந்தங்களை யுடையவர் ஸ்வாமி.

77. வினைகளை வேர்பறியக்காய்ந்த வண்மையிராமானுசன்.
கருமங்களை வேரோடே யறும்படிபோக்கி ஔதார்யமே வடிவுகொண்டவர் ஸ்வாமி.

78. திருந்நித் திருமகள் கேள்வனுக்காக்கு மெம்மிராமானுசன்.
ஆத்மாபஹாரக் கள்வர்களைத் திருத்தித் திருமாலுக்காளாகச்செய்தருள்பவர் ஸ்வாமி.

79. பொய்யைச் சுரக்கும்பொருளைத் துரந்து மெய்யைப் புரக்குமிராமானுசன்.
பொய்யான விஷயங்களையே மேன்மேலும்வெளியிடுகின்ற புறமதத்தவர்களின் அபார்த்தங்களைக்கண்டித்து ஸத்யார்த்தங்களை ரக்ஷித்தருளினவர் ஸ்வாமி.

80. நல்லோர்பரவுமிராமானுசன்.
பரமஸாத்விகர்களான ஆழ்வானெம்பார் ஆண்டான் ஆச்சான் பிள்ளான், போன்றவர்கள் கொண்டாட நின்றவர் ஸ்வாமி.

81. அரங்கன் செய்ய தாளிணைகள் பேர்வின்றிப் பெறுத்துமிராமானுசன்.
பெரிய பெருமாளுடைய திருவடித்தாமரைகளை ஒருகாலும் விட்டு நீங்காதபடி (பக்தர்களுக்கு) சிரோபூஷணமாகத் தந்தருளுமியல்வினர் ஸ்வாமி.

82. ஒரு பொழுதில் பொருவற்ற கேள்வியராக்கும் தெரிவுற்ற கீர்த்தியிராமானுசன்.
(ஆச்ரிதர்களை) ஒரு க்ஷண காலத்தில் ஒப்பற்ற பஹுச்ருதர்களாக்கவல்ல யசஸ்வியானவர் ஸ்வாமி.

83. தன்பதயுகமா மேர்கொண்ட வீட்டை யெளிதினிலெய்துவிக்குமிராமானுசன்.

தம்முடைய உபயபாதங்களாகிற பரமமோக்ஷத்தை எளிதாக [அநாயாஸமாக] அடையச் செய்பவர் ஸ்வாமி.

84. தன் தொண்டர் பொற்குலில் தொண்டு கொள்விக்குமிராமானுசன்.

தம்மடியார்களின் திருவடிகளிலே அடிமைப்படுத்துமவர் ஸ்வாமி.

85. ஓதிய வேதத்தினுட் பொருளறியாதுழல்கின்ற தொண்டர் பேதைமை தீர்த்தவிராமானுசன்.

ஓதப்படுகிற வேதங்களி னுட்பொருளறியாமல் தடுமாறுகின்ற பேதையர்களின் பேதைமையைத் தீர்த்தவர் ஸ்வாமி.

86. ஒள்ளியநூல் கற்றார் பரவுமிராமானுசன்.

சிறந்த சாஸ்த்ரங்களைக் கற்றவர்களாலே கொண்டாடப்படுமவர் ஸ்வாமி.

87. உணர்வின்மிக்கோர் தெரியும்வண்கீர்த்தியிராமானுசன்.

சிறந்த ஞானிகள் அநுஸந்திக்கும் திவ்ய கீர்த்தியையுடையவர் ஸ்வாமி.

88. குறையல்கலைப்பெருமானொலிமிக்க பாடலையுண்டு வலிமிக்க சீயமிராமானுசன்.

திருமங்கையாழ்வாரருளிய பெரிய திருமொழியையும் மற்றுமுள்ள பிரபந்தங்களையும் அநுபவித்து அதனால் மிடுக்கு அதிகரித்த சிங்கம் போன்றவர் ஸ்வாமி.

89. போற்றருஞ் சீலத்திராமானுசன்.

புகழ்ந்து தலைக்கட்ட முடியாத சீலகுணத்தையுடையவர் ஸ்வாமி.

90. பிறவியை நீக்கி யாளவந்த விராமானுசன்.

புநர்ஜன்மத்தைப்போக்கி உஜ்ஜீவனம் செய்தருள வவதரித்தவர் ஸ்வாமி.

91. எல்லாவுயிர்கட்கும் நாதன் அரங்கனென்னும் பொருள் சுரந்தவிராமானுசன்.

ஸ்ரீரங்கநாதனே ஸர்வஸ்வாமி யென்கிற பரமார்த்தத்தை வெளியிட்டவர் ஸ்வாமி.

92. செம்மை நூற்புலவர்க்கு எண்ணருங் கீர்த்தியிராமானுசன்.

நல்ல சாஸ்த்ரங்களைக் கற்றுக் கவிசொல்ல வல்லவர்கட்கும் அளவிட முடியாத கீர்த்தியையுடையவர் ஸ்வாமி.

93. கட்டப்பொருளை மறைப்பொருளென்று கயவர் சொல்லும் பெட்டைக்கெடுக்குமிராமானுசன்.

தவறான அர்த்தங்களை வேதார்த்தமாகக் கொண்டு சொல்லுகிற குத்ருஷ்டிகளின் பிரட்டுப் பேச்சுக்களைக் கண்டித் தொழித்தவர் ஸ்வாமி.

94. பரந்தாமமென்னுந் திவந்தருந் தீதிலிராமானுசன்.

பரமபதமென்கிற வானுலகத்தை யளிக்கவல்ல ஹேயப்ரத்யநீகர் ஸ்வாமி.

95. பல்லுயிர்க்கும் வீடளிப்பானெம்மிராமானுசன்.

ஸகலாத்மாக்களுக்கும் முத்தியளிப்பவர் ஸ்வாமி.

96. தன்னையுற்றவ ரெம்மிறைவருளராமிராமானுசன்.

தம்மையாச்ரயித்த மஹான்கள் நமக்குத் தலைவர்களாயிருக்கப் பெற்றவர் ஸ்வாமி.

97. தன்னையுற்றாட் செய்யுந் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள்தன்னை
யுற்றாட் செய்யவுய்த்த விராமானுசன்.

தம்மடியார்களின் திருவடிகளிலே அடிமைப்படும்படி செய்பவர் ஸ்வாமி.

98. சுவர்க்கத்திலும் நரகிலும் சுழல் பிறப்பிலுமிடாத நம்மிராமானுசன்.
ஸ்வர்க்கத்திலும் நரகத்திலும் புநர்ஜன்மத்திலும் தள்ளமாட்டாதவர் ஸ்வாமி.

99. நீணிலத்தே போந்த பொற் கற்பகமெம்மிராமானுசன்.
இந்நிலவுலகத்திலே தோன்றின கல்பவ்ருக்ஷம் போன்றவர் ஸ்வாமி.

100. நெஞ்சென்னும் பொன்வண்டமர்ந்திடுமடிப்போதிராமானுசன்.
(பக்தர்களின்) நெஞ்சாகிற பொன்வண்டு நித்யவாஸம் செய்யப்பெற்ற திருவடித் தாமரைகளை யுடையவர் ஸ்வாமி.

101. துயரகற்றி யுயக்கொண்டு நல்குமிராமானுசன்.
துக்கங்களைப்போக்கி உஜ்ஜீவிக்கச் செய்து அருள் செய்பவர் ஸ்வாமி.

102. கடல்புடை சூழ்வையமிதனில் வண்மை வளர்ந்த ஐயனிராமானுசன்.
கடல்சூழ்ந்த விம்மண்ணுலகினுள்ளே ஔதார்யகுணம் வளரப் பெற்றவர் ஸ்வாமி.

103. மெய்வினைநோய்களைந்து நன்ஞானமளித்தனிராமானுசன்.
உடலைப்பற்றி யிருக்கிற வினைநோய்களை யெல்லா மொழித்து விலக்ஷணமான ஞானத்தை யருள்செய்தவர் ஸ்வாமி.

104. செழுங்கொண்டலிராமானுசன்.
விலக்ஷணமான மேகம்போன்றவர் ஸ்வாமி.

105. நல்வேதியர்கள் தொழுந்திருப்பாதனிராமானுசன்.
நல்ல வைதிகர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடிகளையுடையவர் ஸ்வாமி.

106. மாயனுக்கிருப்பிடமாம் மனமுடையனிராமானுசன்.
வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை முதலானவற்றோடு ஸர்வேச்வரன் வந்தெழுந்தருளியிருக்குமிடமான திருவுள்ளத்தையுடையவர் ஸ்வாமி.

107. இன்புற்ற சீலத்திராமானுசன்.
ஆனந்த பூர்ணராயெழுந்தருளியிருக்கிற ஸௌசீல்ய நிதியானவர் ஸ்வாமி.

108. நம் தலைமிசையே மன்னுமடிப்பூவிராமானுசன்.
நம் தலைமீது நித்யவாஸம் பண்ணும் திருவடித்தாமரைகளையுடையவர் ஸ்வாமி. (108.)

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் எழுதிய
நூற்றந்தாதியிராமானுசமாலை
முற்றுப் பெற்றது.

மன்மதவருஷ சித்திரைமீ நான்காந்தேதி
ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்வாமி திருமுன்பே
எழுதித் தலைக்கட்டிற்றிது.
ஸ்ரீ ரஸ்து.

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) சென்னை-1.